# இயேசுவிடம் இருந்து மனுகுலத்திற்கு மன்றாட்டு செபம்

## மன்றாட்டு செபம்: 1- கள்ளத்தீர்க்கதரிசியிடமிருந்து பாதுகாப்பு

அன்பான இயேசுவே கள்ளத்தீர்க்த்தரிசியின் நயவஞ்சகத்திலிருந்து எங்களைக் காப்பாற்றும். இயேசுவே எங்கள் மீது இரக்கமாயிரும். இயேசுவே, வாதையிலிருந்து எங்களைக் காப்பாற்றும். இயேசுவே அந்திகிறிஸ்துவிடமிருந்து எங்களை பாதுகாத்தருளும். ஆண்டவரே இரக்கமாயிரும். கிறிஸ்துவே இரக்கமாயிரும் அன்பான இயேசுவே, உம்முடைய விலைமதிக்க முடியாத இரத்தத்தால் எங்களை சூழ்ந்துக் கொள்ளும். அன்பான இயேசுவே கள்ளத்தீர்க்கத்தரிசியின் பொய்களுக்கு எங்கள் கண்களை திறந்தருளும் அன்பான இயேசுவே, உம்முடைய திருச்சபையை ஒன்று கூட்டியருளும் இயேசுவே, எங்களது தேவதிரவிய அனுமானங்களை பாதுகாத்தருளும் இயேசுவே, கள்ளத்தீர்க்கதரிசி உம் திருச்சபையை பிரிக்கவொட்டாதிரும். அன்பான இயேசுவே பொய்கள் எங்களுக்கு மெய்யென்று தருவதை, நாங்கள் நிராகரிக்க உதவியருளும். இயேசுவே, எங்களுக்கு பலத்தைத் தாரும். இயேசுவே எங்களுக்கு நம்பிக்கையைத் தாரும். இயேசுவே, எங்கள் ஆன்மாவை பரிசுத்த ஆவியானவரால் நிரப்பியருளும். இயேசுவே, எங்களை மிருகத்திடமிருந்து பாதுகாத்தருளும்:- இயேசுவே நாங்கள் உம் மெய்யான திருச்சபையை என்றென்றும், அநாதி சதாகாலமும் பின்பற்ற எங்களுக்கு பகுத்தறிவின் ஞானத்தை தாரும். ஆமென்.

## மான்றாட்டு செபம் : 2 – பாதுகாப்பு கிருபைக்கான செபம்

ஓ பரலோகத்திலிருக்கிற அதி உன்னத பிதாவே, உம்மை நான் அன்பு செய்கிறேன். உம்மை நான் அர்ச்சிக்கிறேன். ஆண்டவரே இரக்கமாயிரும். ஆண்டவரே எங்கள் மீறுதல்களை மன்னியும். நான் உம்மை ஆராதிக்கிறேன். நான் உம்மைப் போற்றுகிறேன். உம்முடைய விசேஷித்த கிருபைக்காய் நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். எனக்கு நேசமானவர்களுக்கு (பெயர்கள்) பாதுகாப்பு கிருபை கிடைக்க உம்மிடம் மன்றாடுகிறேன். எந்நேரமும் என்னுடைய உண்மைச்சார்பை நான் உமக்கே செலுத்துகிறேன். ஓ பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, அனைத்தையும் படைத்தவரே, சர்வலோகத்தையும் படைத்தவரே, மனுகுலத்தை படைத்தவரே, நீரே எல்லாவற்றிற்கும் ஆதிமூலமாய் இருக்கிறீர் நீரே அன்பின் இருப்பிடம். நீரே அன்பு. நான் உம்மை அன்பு செய்கிறேன். நான் உம்மை சாஷ்டாங்கமாய் வணங்கி ஆராதிக்கிறேன். உம்மை அறியாத மக்களுக்காகவும், உம்மை வணங்காதவர்களுக்காகவும், உம் இரத்தத்தின் கரத்தை நிராகரிப்பவர்களுக்காகவும், உம்மிடத்தில் இரக்கத்தை வேண்டுகிறேன். என்னுடைய ஆவி, ஆன்மா, சரீரம் அனைத்தையும் உமக்கே கையளிக்கிறேன். அதை உம் கரங்களில் பெற்றுக் கொண்டு என்னைத் தீமையிலிருந்து பாதுகாத்தருளும்

கடைசியாக நீர் எங்களுக்காக உருவாக்கிய ஆஸ்தியாகிய மோட்சத்தின் கதவுகளை திறந்து, உம்முடைய சந்ததியை ஒன்று கூட்டியருளும். ஆமென்.

**மன்றாட்டு செபம் : 3- தேவனின் வார்த்தையை பாதுகாக்க செய்யும் செபம்**

ஓ அன்பான இயேசுவே, தேவனே, தேவ அவமரியாதை செய்கிற பொய்களிலிருந்து எங்களைப் பாதுகாத்தருளும். சாத்தானிடம் இருந்தும், அவனுயை சேனைகளிடமிருந்தும் எங்களைக் காப்பாற்றும். உம்மை அதிகமாக நேசிக்க உதவியருளும் எங்கள் போராட்டத்தில் நிலை நிற்க செய்யும். எங்கள் நம்பிகைகையை பாதுகாத்தருளும். உம்முடைய பாதுகாப்பு அரணுக்குள் எங்களைக் கூட்டிச் சேர்தருளும். எழுந்து நின்று உம் சித்தத்திற்காய் போராட எங்களுக்கு உதவியருளும். உம் மெய்யான சீ'டர்களாக எங்களை ஒப்புக் கொடுக்க, எங்களை பலப்படுத்தும் உம் பலத்தையும், உம் மீது நம்பிக்கையையும் எங்களுக்குத் தாரும். மெய்யான வழியில் எங்களை நடத்தியருளும். எதிரிகளிடமிருந்து எங்களைப் பாதுகாத்தருளும் உம்முடைய அடைக்கலத்தின் கிருபையை எங்கள் மீது பொழிந்தருளும். சோதனையில் எங்களை விழவிடாதேயும் உம்முடைய திரு இருதயத்தின் அருகாமையில் எங்களை கூட்டிச் சேர்த்தருளும். உமக்கு என்றென்னும் உண்மையோடு இருக்க எங்களுக்கு உதவியருளும். ஆமென்.

**மன்றாட்டு செபம் : 4- பிதாவாகிய தேவனிடமிருந்து வரும் தண்டனையை தவிர்க்க செபம்.**

ஓ அதி உன்னத தேவனே, உம் மக்களின் பாவத்திற்காக உம்மிடத்தில் இரக்கத்தைக் கொஞ்சிக் கேட்கிறோம். உலகத்தையும், மனுகுல வாழ்வையும் எங்களுக்குத் தந்ததற்காய் உமக்கு நன்றி கூறுகிறோம். நாங்கள் வாழ்வின் வரதைத் பொக்கிஷமாக கருதுகிறோம். வாழ்வின் வரத்தை ஏறெடுக்கிறோம். உம் திருமகன் இயேசு கிறிஸ்து என்னும் கிருபைக்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் எங்களுக்கு பரிசாய் அளித்த இரட்சணியத்திற்காய் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்முடைய தெய்வீகத் தன்மையை பணிந்து போற்றுகிறோம். உம் திருச்சித்தம் பரலோகத்திலும் பூலோகத்திலும் முழுமை அடைய நாங்கள் எங்களை உமக்கு முழுமையாக கையளிக்கிறோம். மனசாட்சியில் ஒளிர்வடையும் கிருபைக்காய் நாங்கள் உமக்கு நன்றி கூறுகின்றோம். நித்திய வாழ்வை எங்களுக்கு அளிப்பேன் என்ற வாக்குதித்தற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். புதிய பரதேசத்தை நாங்கள் வரவேற்கிறோம். எல்லா ஆன்மாக்களையும் முக்கியமாக உம்மைக் காயப்படுத்துகிறவர்களையும், உம்மைத் தொலைத்தவர்களையும் காப்பாற்ற நாங்கள் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம். நீர் உம்முடைய மக்கள் மீது காட்டிய உம்முடைய அன்பிற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். தீர்க்கதரிசன வரத்திற்காக நாங்கள் உமக்கு நன்றி

கூறுகிறோம். செபத்தின் வரத்திற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். எங்களுக்கு சமாதானத்தையும், இரட்சிப்பையும் அளிக்கும்படி நாங்கள் உம்மிடம் கேட்கிறோம். ஆமென்.

**மன்றாட்டு செபம் : 5 – சாவான பாவத்திலிருந்து விடுதலை அடைய செபம்.**

இயேசுவே அனைத்து ஆன்மாக்களையும், நரக நெருப்பிலிருந்து காப்பாற்றும். இருண்டு போன ஆன்மாக்களை மன்னியும். அவர்கள் உம்மை கண்டு உணர உதவும். இருளிலிருந்து அவர்களைத் தூக்கி எழுப்பிவிடும். அவர்களுடைய கண்களையும், இருதயத்தையும் திறந்தருளும் சத்தியத்தை அவர்களுக்குக் காண்பியும் அவர்களை காப்பாற்றும். நீர் அழைக்கும் போது அவர்கள் செவி கொடுக்க உதவி புரியும். அகங்காரம், மோகம் மற்றும் பொறாமையை நீக்கியருளும் தீமையிலிருந்து அவர்களை பாதுகாத்தருளும். அவர்களது மன்றாட்டை கேட்டருளும். அவர்கள் கரங்களைப் பிடித்து உம்மை நோக்கி இழுத்துக் கொள்ளும். சாத்தானுடைய கண்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 1- இயேசு ஆன்மாக்களை காப்பாற்ற என் அர்ப்பணம்.**

என் அன்பான இயேசுவே, நீர் எங்களை அதிகமாக நேசிப்பதினால், நீர் உம் விலை மதிக்க முடியாத ஆன்மாக்களைக் காப்பாற்ற நான் என்னை உமக்கு தாழச்சியுடன் அர்பணிக்கிறேன். அனைத்து பாவிகளிடத்திலும், அவர்களை எவ்வளவாய் உம்மை வேதனைப்படுத்தியிருந்தாலும், அவர்கள் மீது இரக்கமாயிரும். எச்சரிக்கை நாளின் போது உம்முடைய ராஜ்யத்தில் உமக்கு அருகில் இருக்கும் பாக்கியம் கிடைக்காத ஆன்மாக்களை காப்பாற்ற என்னுடைய செபங்களையும், வேதனைகளையும் உமக்கு சமர்ப்பிக்க எனக்கு உதவியருளும். ஓ நல்ல இயேசுவே நீர் காப்பாற்ற வைத்திருக்கும் ஆன்மாக்களை இரட்சிக்க என் செபத்தைக் கேட்டருளும். ஓ இயேசுவின் திரு இருதயமே, நான் என்னுடையவைகள் அனைத்தையும், உம் சித்தத்திற்கு சதாகாலமும் அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம்: 2 – உலக ஆளுநர்களுக்காக செபம்.**

என்றென்றும் வாழும் என் பிதாவே, கெடுதல் ஒன்றும் அறியாத நாடுகளில் வாழும் உம்முடைய மக்களுக்கு விரோதமாக முடிவு செய்யப்பட்டுள்ள அகில உலக சக்தியின் வாதைகளிலிருந்து உம்முடைய திருமகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தனால் பாதுகாத்தருளும். இந்த வேதனையை உருவாக்கும் ஆன்மாக்களின் பாவத்திற்காக நான் மன்னிப்பு கேட்கிறேன். அதனால் அவர்கள் தாழ்ச்சியுடன் மனமாற்றம் அடைந்த இருதயத்தோடு உம்மிடம் திரும்பி வருவார்களாக சித்திரவதை செய்யப்படுகிற உம் மக்கள், அதை சக்தியோடு தாங்கிக்

கொள்ளவும், அகில உலகின் பாவங்களுக்கு பரிகாரமாக அதை ஒப்புக் கொடுக்கவும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாய், தயவாய் கேட்கிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 3- உலகத்திலிருந்து பயத்தை நீக்க செபம்.**

ஓ ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே, உம்முடைய அன்பான இருதயத்திலிருந்து உலகத்தினர் மேலுள்ள பயத்தால் விலகியிருக்கும் ஆன்மாக்களின் பயத்தை நீக்குமாறு உம்மிடம் கெஞ்சி மன்றாடுகிறேன். எச்சரிக்கை வேளையின் போது, மெய்யான பயத்தில் மூழ்கியிருக்கும் ஆன்மாக்கள், அப்பயத்திலிருந்து விடுதலை பெற்று, உம் இரக்கம் தங்களை சூழ்ந்து கொள்ள, தம்மை உம்மிடம் முற்றிலுமாய் கையளிக்க வேண்டுகிறேன். அதனால் அவர்களை நியமிக்கப்பட்டபடி உம்மை அன்பு செய்யவும் உம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 4 – அனைத்து குடும்பங்களும் ஒன்று சேர செபம்.**

எச்சரிக்கை வேளையின் போது அனைத்து குடும்பங்களையும் ஒன்று கூட்டிச் சேர்த்தருளும் இயேசுவே. அதனால் அவர்கள் நித்திய இரட்சிப்பு அடையும்படி செய்யும். இயேசுவே, எல்லா குடும்பங்களும் உம்மோடு ஒன்றாக இணைந்து இருக்கவும் அதனால் அவர்கள் உம்முடைய புதிய பரதேசத்தை இவ்வுலகில் பெற்றுக் கொள்ள உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 5- அதி உன்னத தேவனுக்கு ஆராதனை செபம்.**

ஓ நித்திய பிதாவே, விலை மதிக்க முடியாத உம் இரக்கத்தை மனுகுவத்திற்கு தந்தற்காய் நாங்கள் நன்றியுடன் கூடிய சந்தோஷத்தோடு எங்கள் செபங்களை உமக்கு கையளிக்கிறோம். உன்னத மகிமையின் ராஜாவுக்கு, உம் அன்பான மென்மையான இரக்கத்திற்காக, எங்கள் ஸ்தோத்திரங்களையும் நமஸ்காரங்களையும் நாங்கள் மகிழ்ச்சியாய் அர்ப்பணிக்றோம். நீரே அதி உன்னத தேவனும், ராஜாவுமாகியிருக்கிறபடியால் நீர் தந்த இந்த உம் கிருபைக்காய் உம் பாதத்தில் தாழ்ச்சியுடன் எங்களை சமர்ப்பிக்கிறோம். தேவனே, உம் மக்கள் அனைவர் மீதும் இரக்கமாயிரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 6 – அந்திகிறிஸ்துவை தடுக்க வேண்டி செபம்**

ஓ இயேசுவே, தேவன் தம்முடைய இரக்கத்தினால் அந்திகிறிஸ்துவையும், அவனுடைய மோசமான படைகளையும் தடை செய்து உம்முடைய மக்களை பயங்கரத்திலிருந்தும், ஆபத்துகளிலிருந்தும் காத்துகொள்ளும். எச்சரிக்கை

வேளையின் போது உம் மக்கள் அடையும் மனமாற்றத்தினால் அவன் செய்கை தடுக்கப்பட்டு உமது தண்டனையின் கரம் நிறுத்தப்படுவதாக. ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 7 - இரக்கம் பெற மறுக்கும் ஆன்மாக்களின் மனமாற்றத்திற்கான செபம்**

இயேசுவே, உம்முடைய இரக்கத்தின் ஒளியைப் பெற மறுக்கும் இருளான ஆன்மாக்களை உடைய பாவிகளை மன்னிக்கும்படி நான் உம்மிடம் கெஞ்சிக் கேட்கிறேன். இயேசுவே, அவர்களை மன்னித்தருளும். தவிர்க்க முடியாக பாவங்களிலிருந்தும், தங்களை விடுவித்துக் கொள்ள இயலாத பாவங்களிலிருந்தும் அவர்களுக்கு இரட்சிப்பு கொடுக்கும்படி நான் உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன். உம்முடைய இரக்கத்தின் கதிர்களால் அவர்களது இருதயத்தை நிரப்பி, அவர்கள் உம் மந்தையில் சேரும் வாய்ப்பை அவர்களுக்கு அளித்தருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 8 – பாவமன்னிப்பு செபம்**

அன்பான இயேசுவே பிறரை துன்புறுத்தி, வேதனை படுத்திய என் பாவங்களை மன்னியும். உம்மை நான் மீண்டும் துன்புறுத்துவதை தவிர்க்கும் கிருபையையும், உம் திருச்சித்தத்தின்படி பாவ நிவர்த்தி செய்யும் கிருபையையும் அளித்தருளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன். எதிர்காலத்தில் இதுபோன்று வேதனைபடுத்தும் காரியங்களை மன்னித்தருளுமாறு உம்மை வேண்டுகிறேன். உம்முடைய புதிய சமாதான காலத்திற்கு என்னை அழைத்துச் சென்று உம்முடைய நித்திய குடும்பத்தின் அங்கத்தினராக்கும். இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன். எனக்கு நீர் தேவை. நான் அனைத்திலும் உமக்கும் உம்மை சாாந்த அனைவருக்கும் மரியாதை செய்கிறேன். உம் ராஜ்யத்துக்குள் நுழையும் பாக்கியத்தை அடைய எனக்கு உதவியருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 9 – துன்பங்களை பரிசாக ஒப்புக் கொடுக்கும் செபம்.**

ஓ மிகவும் பரிசுத்தமான இயேசுவின் திரு இருதயமே, உம் வார்த்தைகளை நான் அறிவிக்கும் போது, எனக்கு நேரிடும் அவமானங்களை உம் திரு நாமத்தினால், தாழ்மையான நன்றியறிதலுடன் அதை ஏற்றுக் கொள்ளப் போதித்தருளும் அவமானங்களும், வலியும் மற்றும் வேதனைகளும் என்னை உம்முடைய பரிசுத்த இருதயத்தின் அருகில் எவ்வாறு கொண்டு வருகிறது என்பதை நான் உணர எனக்குப் போதித்தருளும். இம்மாதிரியான சோதனைகளை அன்புடனும், பெருந்தன்மையுடனும் பொறுத்துக் கொள்ளவும். அத்துன்பங்களை, ஆன்மாக்களைக் காப்பாற்ற விலை மதிகக் முடியாத பரிசாக உமக்குச் சமர்ப்பிக்கின்றேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 10 – அன்பின் ஒளியைப் பரப்பும் செபம்**

அன்பான இயேசுவே உம்முடைய நாமத்தினால் நாங்கள் பயமின்றி எழவும், உம் அன்பு ஒளியை அனைத்து நாடுகளுக்கும் பரப்பவும் எங்களுக்கு உதவி செய்யும். உம் மக்கள் உம் இரக்கத்தை நம்பாத அவநம்பிக்கையாளர்களால் வதைபடும் போது, அதை திடமாய் தாங்கும் சக்தியை உம் இரக்கத்தினால் அளித்தருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 11 – தேவசாட்சியாளர்களை வெறுப்பதை நிறுத்த செபம்**

ஓ இயேசுவின் திரு இருதயமே, உம் வழியில் நடப்பவர்கள், உம்மை சத்தியமாய் சாட்சியாளர்களை இந்நேரங்களில் வெறுப்பதையும், அவர்கள் மேல் பொறாமைப்படுவதையும் தடுத்தருளும். உம் சாட்சியாளர்கள், உம் பரிசுத்த திருவார்த்தையை நம்பாதவர்களுக்கு போதிக்கும் போது, அவர்களுக்கு தேவையான பலன் தருமாறு உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 12 – பெருமையின் பாவங்களை போக்க செபம்**

ஓ என் இயேசுவே, நான் உம் நாமத்தினால் பேசும் போது நேரிடும் பெருமையின் பாவத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் நான் எப்போதாவது, யாரையாவது தாழ்வாக நினைத்திருந்தால் உம் திரு நாமத்தினால் என்னை மன்னித்தருளும். இயேசுவே நீர் என்னிடம் பேசும் போது, நான் அதை தெளிவாக கேட்க, உம் பரிசுத்த ஆவியை என்னுள் நிரப்பும். அதனால், நீர் மனுகுலத்தை அழைக்கும் போது உம் வார்த்தையின் சத்தியத்தை பகுத்தறிய எனக்கு உதவும். அமென்.

**சிலுவைப் போர் செபம் : 13 – பாதுகாப்புத்தடை வேண்டி செபம்**

ஓ பரலோகத்திலிருக்கிற பிதாவே, உம் அன்பு மகன் இயேசு கிறிஸ்துவின் அன்பினாலும், பரிவிரக்கத்தினாலும் சிலுவை மரணத்தின் வழியாக எங்களை பாவங்களிலிருந்து காப்பாற்றியதாலும், அவருடைய இரக்கத்தின் கரங்களை மறுப்பவர்களை காப்பாற்றியருளும். அன்புத் தந்தையே, உம் அன்பினால் அவர்கள் ஆன்மாவை நிரப்பியருளும். பரலோ பிதாவே, என் செபத்தைக் கேட்டு, இந்த ஆன்மாக்களை நித்திய தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டி உம்மை கெஞ்சி மன்றாடுகிறேன். உம் இரக்கத்தினால் அவர்களை முதலில் உம் புதிய சமாதான வாழ்வுக்கு அழைத்துச் செல்லுமாறு வேண்டுகிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 14 – அணு ஆயுத போரிலிருந்து காப்பாற்ற பிதாவாகிய தேவனிடம் செபம்.**

ஓ வல்லமையுள்ள பிதாவே, அதி உன்னத தேவனே, அனைத்து பாவிகளின் மேலும் இரக்கமாயிரும். இரட்சிப்பையும், அளவில்லாத கிருபையையும் பெற்றுக்

கொள்ள அவர்களது இருதயத்தை திறந்தருளும். என் சொந்தக் குடும்பத்தினா் ஒவ்வொருவரும் உம் அன்பு இருதயத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கெஞ்சி மன்றாடுகிறேன். ஓ பரிசுத்த பரலோக பிதாவே, உம் மக்களை அழிக்க செய்யப்படும் அனு ஆயுதப் போரிலிருந்தும், அதைப் போன்ற பிறத் திட்டங்களிலிருந்தும் உம் மக்களை பாதுகாத்தருளும். எல்லாவிதமான ஆபத்துகளிலிருந்தும் எங்களைக் காப்பற்றி பாதுகாத்தருளும். உமது இரட்சிப்பின் உண்மையை நாங்கள் காணவும், கேட்கவும், உணரவும் செய்து, எங்கள் ஆன்மாவிலிருந்து பயத்தை நீக்கி ஒளிர்வடைய செய்யும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 15 – திரு இரக்கத்தின வரத்துக்கு நன்றியறிதல் செபம்**

ஓ என் பரலோக பிதாவே, நீா் இவ்வுலகத்திற்கு அனுப்பிய, உம் மனமாா்ந்த பாராட்டுக்கு உகந்த இரட்சகரின் பலிக்காக உம்மை ஆராதிக்கின்றோம். நீா் உம் மக்களுக்கு அளித்த இரக்கத்தின் வரத்திற்காக உமக்கு மகிழ்ச்சியுடனும், நன்றியறிதலுடனும் எங்கள் செபத்தை மனத்தாழ்ச்சியுடன் சமா்ப்பிக்கிறோம். ஓ அதி உன்னத தேவனே இந்த பெரிதான இரக்கத்தை நன்றியறிதலுடன் பெற்றுக் கொள்ள எங்களை தகுதியுள்ளவா்களாக்கும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 16 – எச்சரிக்கையின் போது அருளப்படும் வரங்களை பெற்றுக் கொள்ள செபம்**

ஓ என் இயேசுவே, உம் பெரிதான இரக்கத்தின் நேரத்தில் என்னை பலப்படுத்தும் உம் கண்களுக்கு முன் சிறுமையாய் மாறும் கிருபையை எனக்கு அளித்தருளும். உம் நித்திய இரட்சிப்பின் உண்மையை காண என் கண்களை திறந்தருளும். என் பாவங்களை மன்னித்து உமது அன்பு மற்றும் நட்பின் கரத்தை எனக்கு காண்பித்தருளும். நாம் அனைவரும் ஒன்றித்திருக்க உம் திருக்குடும்பத்தின் கரத்திற்குள் என்னைக் கூட்டிச் சேர்த்தருளும். இயேசுவே, நான் உம்மை அன்பு செய்கிறேன். உம் திருவார்த்தைகளை என் இருதயத்தில் பயமில்லமலும் பரிசுத்த ஆன்மாவோடும் என்றென்றும் எடுத்துரைக்க நான் பிரதிக்கினை செய்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 17 - இரட்சிப்பின் மாதாவிடம் இருளான ஆன்மாக்களுக்காக செபம்.**

ஓ மரியாயின் மாசற்ற இருதயமே, எங்கள் இரட்சணியத்தின் மாதாவே அனைத்து கிருபைகளைக் பெற்றுக் கொள்வதற்காக பரிந்துறை செய்பவரே, பொல்லாத சாத்தானிடமிருந்து ஆன்மாக்களை இரட்சிக்க பங்கெடுப்பவரே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். இரட்சணியத்தின் மாதாவே, உம் திருக்குமாரனும், எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து மீண்டும் ஒருமுறை

இம்மனுக்குலத்தை இரட்சிக்கவும், நித்திய இரட்சிப்பை எங்களுக்கு அளிக்கவும் வரும்போது அனைத்து ஆன்மாக்களும் அந்த இரட்சிப்பைப் பெற்று கொண்டு காப்பாற்றப்பட எங்களுக்காக வேண்டிக் கொள்ளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 18 – அந்திகிறிஸ்துவையும், அவன் கூட்டாளிகளையும் நிறுத்த வேண்டி செபம்**

ஓ அன்பான இயேசுவே, இவ்வுலகை அந்திகிறிஸ்துவிடமிருந்து காப்பாற்றியருளும் சாத்தானின் பொல்லாத பயங்கரமான கூச்சல்களிலிருந்து எங்களை பாதுகாத்தருளும் இறுதியில் எஞ்சியிருக்கும் உம் திருச்சபையை தீமையிலிருந்து காத்தருளும். சாத்தானும், அவனுடைய தீவீரவாத படைகளும் உம் திருச்சபையிடம் போர் புரியும் போதும், திருச்சபையை வதை செய்யும் திட்டஙகளிலிருந்தும் பாதுகாத்து கொள்ள தேவையான பலத்தையும், கிருபையையும் எங்களுக்கு அருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 19 - இளைஞர்களுக்கான செபம்**

இரட்சணியத்தின் மாதாவே, பயங்கரமான இருளிலிருக்கும் இளம் ஆன்மாக்களுக்காக வேண்டிக் கொள்ளும். அதனால் உம் திருக்குமாரன் இம்மனுகுலத்தை மீட்க வரும் போது அவர்கள் உணர்ந்து கொள்வார்களாக ஒரு ஆன்மாவைக் கூட பிரிந்து போக விடாதேயும். ஒரு ஆன்மா கூட அவருடைய பெரிதான இரக்கத்தை நிராகரிக்க விடாதேயும். மாதாவே, அனைவரையும் காப்பாற்றி, உம் புனித முக்காட்டினால் இந்த ஆன்மாக்களை மூடி, தந்திரகாரனிடமிருந்து அவர்களை காப்பாற்றுமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 20 – அந்திகிறிஸ்து இவ்வுலகை அழிப்பதை தடை செய்யும் செபம்**

ஓ பிதாவாகிய தேவனே, அந்திகிறிஸ்து உம்மக்களின் ஆன்மாக்களை தந்திரமாய் பிடித்துக் கொள்வதை தடுக்குமாறு உம் திருக்குமாரனின் ஈடு இணையில்லா திரு நாமத்தினால் கேட்டுக் கொள்கிறோம். வல்லமையுள்ள தேவனே, அவன் உம் மக்களிடம் வெளிப்படுத்தும் பயங்கரங்களை நிறுத்துமாறு உம்மிடம் கெஞ்சி மன்றாடுகிறேன். அவன் உம் படைப்புக்களை பாழாக்குவதிலிருந்து தடுத்து அவனை எதிர்த்து நிற்க இயலாத எளிய ஆன்மாக்கள் மீது இரக்கமாயிரும். அன்புத்தந்தையே உம் மக்கள் அனைவரையும் இந்த பயங்கரமான தீமையிலிருந்து காப்பாற்ற எங்கள் செபத்தைக் கேட்டருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 21 – மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக பிதாவாகிய தேவனுக்கு நன்றியறிதல் செபம்**

ஓ பரிசுத்த தேவனே, வல்லமையுள்ள ஆண்டவரே, நீர் மனுக்குலத்தைப் படைத்து, அன்பு செய்து, ஆதரித்து வருவதற்காக உம்மை நன்றியுடன் போற்றுகிறோம். உம் எளிய மக்களுக்கு நீர் அருளிய இரட்சிப்பின் கிருபைக்காய் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஓ ஆண்டவரே, தந்திரக்காரனை பின்பற்றுகிறவர்களை மீட்டு, அவர்கள் இருதயத்தை நித்திய வாழ்வின் உண்மைக்கு திறந்தருளுமாறு உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 22- கத்தோலிக்க குருமாக்கள் திருச்சபையின் படிப்பினைகளை நிலைநிறுத்துவதற்கான செபம்**

ஓ என் அன்பான இயேசுவே, என் வாழ்நாளின் ஒவ்வொரு நிமிடங்களிலும் நீர் என்னைப் பலப்படுத்தி, உம்மேல் நான் வைத்துள்ள அன்புத்தீ அணையாமல் காத்தருளும். உம் மேல் நான் வைத்துள்ள அன்பை ஒருபோதும் மங்காமல், அணையாமல் காத்தருளும். சோதனைகள் வரும்போது ஒருபோதும் என்னை நெகிழ விடாதேயும். என் தேவ அழைத்தலையும், பக்திவைராக்கியத்தையும், விசுவாசத்தையும், பாரம்பரிய கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளையும் என்றென்றும் நான் சங்கித்திருக்க கிருபையருளும். எந்நேரமும் என் சார்பை உமக்கே அளிக்கிறேன். உமது சேனையில் சேர்ந்து போராடுவேன் என்று பிரதிக்கினை செய்கிறேன். அதனால் மகிமையோடு நீர் மீண்டும் வரும் போது கத்தோலிக்கத் திருச்சபை எழுந்து நின்று உம்மை வரவேற்கும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 23 – பாபர்பானவர் 16ம் பெனடிக்ட் அவர்களை பாதுகாக்க செபம்**

ஓ என் நித்திய பிதாவே, உம் அன்புமகன் இயேசுகிறிஸ்து இவ்வுலகை பாவங்களிலிருந்து மீட்பதற்காக பட்ட வேதனைகளை நினைவு கூர்ந்து. உம் பரிசுத்த பிரதிநிதியும், இவ்வுலகில் உம் திருச்சபையின் தலைவருமாகிய திருத்தந்தை 16ம் பெனடிக்கட் அவர்களைக் காப்பாற்ற உம்மிடம் வேண்டிக் கொள்கிறேன். அவர் சாத்தானும், அவனுடன் சேர்ந்து கீழே விழுந்த அவனுடைய தூதர்களுகம் துன்புறுத்தி அபகரிக்கும் இவ்வுலக ஆன்மாக்களான உம் மக்களையும், உம் திருத் தொண்டர்களையும், காப்பாற்ற உமக்கு உதவி செய்வாராக. ஓ பரலோக பிதாவே, எங்கள் திருத்தந்தையைக் காப்பாற்றும் இதன் வழியாக உம் மக்கள் இவ்வுலகின் புதிய பரதேசத்திற்கு செல்லும் உண்மை வழியில் வழி நடத்தப்படுவார்களாக. ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 24 – உலக முழுமையும் பாவ மன்னிப்ப பெற செபம் (இச்செபத்தை ஏழு நாட்கள் தொடர்ந்து செபிப்பவர்களுக்கு முழுமையான பாவமன்னிப்பு, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் அருளப்படும்)**

ஓ என் இயேசுவே, நீரே உலகின் ஒளி உம் ஒளிக்கதிர் எல்லா ஆன்மாக்களையும் தொடுகிறது. உம் அன்புக்கும், இரக்கத்திற்கும் எல்லை கிடையாது. சிலுவையில் மரித்த உம் பலிக்கு நாங்கள் தகுதியுள்ளவர்கள் அல்ல. ஆயினும் நாங்கள் உம்மேல் கொண்டுள்ள அன்பை விட, நீர் எம்மிடம் கொண்டுள்ள அன்பு மிகவும் பெரியது என்பதை அறிந்திருக்கிறோம். ஓ ஆண்டவரே தாழ்ச்சியின் வரத்தை எங்களுக்கு அளித்தருளும் அதனால் உம் புதிய இராட்சியத்தில் பங்கடைய நாங்கள் தகுதியுள்ளவர்களாவோம். பரிசுத்த ஆவியானவரால் எங்களை நிரப்பும் அவர் வழியாய் நாங்கள் முன்னேறி, உம் சேனைகளை உம் திருவார்த்தையின் உண்மைக்கு வழி நடத்தவும், எங்கள் சகோதரரும், சகோதரிகளும் இவ்வுலகில் உம் இரண்டாம வருகையின் மகிமைகக்கு தயாராகவும் எங்களை வழிநடத்தும். நாங்கள் உம்மை ஆராதித்து போற்றுகிறோம். எங்களையும், எங்கள் துன்ப வேதனைகளையும ஆன்மாக்களை இரட்சிக்க பரிசாக அளிக்கிறோம். இயேசுவே, உம்மை நாங்கள் அன்பு செய்கிறோம். உம் பிள்ளைகள் எங்கிருந்தாலம் அவர்கள் மீது இரக்கமாயிரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 25 – தேவசாட்சிகளைக் காப்பாற்ற செபம்**

ஓ அதி உன்னத தேவனே, இவ்வுலகில் இருக்கும் உம் மறைப்பரப்புப் பணியாளர்களை பிறருடைய வெறுப்பிலிருந்து பாதுகாக்குமாறு வேண்டிக் கொள்கிறேன். உம் மேலான திருவார்த்தை இவ்வுலகில் விரையாய் பரவ வேண்டிக் கொள்கிறேன். உம் மறைபபரப்புப் பணியாளர்களை பொய்சாட்சிகளிடமிருந்தும், துன்புறுத்துவோரிடமிருந்தும், பொய்யிலிருந்தும் பாதுகாத்தருளும். அவர்கள் குடும்பத்தினரை பரிசுத்த ஆவியானவரால் எந்ரேநரமும் பாதுகாத்தருளும். உம் மறைபரப்புப் பணியாளர்கள் வழியாய் நீர் இவ்வுலகிற்கு அளிக்கும் செய்திகள் மனதுருக்கத்தையும், மனமாற்றத்தையும் விரைவாய் மக்களிடையே ஏற்படுத்துமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**சிலுவைப் போர் செபம் : 26** – (2012ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ம் நாள் மரியடிவைன் மெர்சிக்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டில், நமது தேவதாயார் புனித செபமாலையை அவரவர் தேசங்கள் காப்பாற்றப்பட செபிக்குமாறு துரிதப்படுத்தியிருக்கிறார்கள்). “ நீங்கள் உங்கள் தேசங்களை காப்பாற்ற என் புனித செபமாலையை செபிப்பது மிகவும் அவசியம் என்பதை மறந்து விட வேண்டாம். “நீங்கள் செபமாலை செய்யும்போது சாத்தானுடைய வீரியம் குறைகிறது. அவன் அதிகப்படியான வலியாலும், வலிமை குறைவினாலும் ஓடி விடுகிறான். நீங்கள் எந்தப்பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவ பக்தியில் இருந்தாலும் சரி, தினமும் ஒருமுறையாவது செபமாலை செபிக்க மறக்க வேண்டாம்.

**செமாலைக்கு முன் சொல்லும் செபம்** : ஓ பரிசுத்த செமாலையின் இராக்கினியே, நீங்கள் பாத்திமா நகரில் மூன்று இடையர் சிறுவர்களுக்கு செபமாலையில் மறைந்திருக்கும் கிருபையின் பொக்கிஷத்தை வெளிப்படுத்த வந்தீர்கள். இந்த பக்தியை என் இருதயத்தில் மெய்யான அன்புடன் வசீகரிக்க உதவும் என் இருதயத்தில் மெய்யான அன்புடன் வசீகரிக்க உதவும் இரட்சிப்பின் தேவரகசியங்களை **தியானிக்கும் போது**, அதன் கனிகளால் நான் முழுமை பெற்று உலகில் சமாதானம் மலரவும், ரஷியா மனம் திரும்பவும், இச்செபமாலையில் கேட்கும் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள எங்களை தயார் செய்யும். (உங்கள் தேவைகளை கூறவும்). இந்த செபத்தை, தேவனின் அதி உன்னத மகிமைக்காகவும், உம்முடைய சங்கை மரியாதைக்காகவும், நல்ல ஆத்துமாக்களுக்காகவும், எங்களுக்காகவும் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

அந்தந்த நாளுக்கு ஏற்ப தேவரகசியங்களைச் சொல்லி செபமாலை மாதாவின் செபமாலையை தினமும் செபிக்கவும்.

செபமாலை முடிந்தபின் சொல்ல வேண்டிய செபம் : ஓ தேவனே உம் ஒரே திருக்குமாரன் இயேசுவினுடைய வாழ்வினாலும், மரணத்தினாலும் உயிர்த்தெழுதலின் மூலமாகவும் எங்களுக்கு நித்தியவாழ்வை பெற்றுத் தந்திருக்கிறீர். ஆசீர்வதிகக்ப்பட்ட கன்னியான மரியாளின் மிகவும் பரிசுத்த செபமாலையின் ரகசியங்களை நாங்கள் தியானிக்கும் போது, அதிலிருக்கும் பரிமாணத்தையும் கிருபையையும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் பெயரால் தருமாறு கெஞ்சிக் கேட்கிறோம். ஆமென்.

செபமாலையின் முடிவில் கிருபை தயாபத்து மாதாவின் செபத்தை செபிக்கவும்.

**சிலுவைப் போர் செபம் : 27 – உலக சமாதானத்துக்காக செபம்**

ஓ என் இயேசுவே, பயங்கரமான போர்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உம் இரக்கத்தைக் கெஞ்சிக் கேட்கிறோம் உம் பிரசன்னத்தின் உண்மையைக் காணாமல், வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் அத்தேசங்களில் உம் சமாதானத்தை நாட்டியருளும் பரிசுத்த ஆவியின் வல்லமையால் இந்நாடுகளை சூழ்ந்துக் கொள்ளும் அதனால் பொல்லாதவர்கள் தங்கள் சக்தியை மாசில்லாத ஆன்மாக்களின் மேல் காட்டுவதைக் தடுத்தருளும் தீமையான கொடுமைகளினால் சக்தியிழந்து தவிக்கும் உம் தேசங்கள் மீதும், அகில உலகத்தின் மீதும் இரக்கமாயிரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம்: 28 – அனைத்துக் கிறிஸ்துவ சபைகளையும் ஒன்றிணைக்க கன்னிமரியாள் சொல்லிக் கொடுத்த செபம்**

ஓ அதி உன்னத தேவனே, இவ்வுலகில் உள்ள உம் கிறிஸ்தவ சபைகளை சார்ந்த உம் மக்கள் போராடி அதை ஒன்றினைக்குமாறு நாங்கள் உம்முன் முழந்தாள் படியிட்டு கேட்கிறோம். எங்களுடைய வேறுபாடுகள் இவ்வுலகின் இந்த இறுதிக்கட்ட பொல்லாங்கான நேரத்தில் எங்களை பிரித்துவிடாமல் காத்தருளும் அன்பு பிதாவே, உம் மீது நாங்கள் கொண்டுள்ள அன்பினால் நாங்கள் ஒருவரையொருவர் நேசிக்கும் கிருபையின் வரத்தை உம் திருமகனும் எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எங்களுக்கு அளித்தருமாறு கெஞ்சி மன்றாடுகிறோம். நாங்கள் உம்மை ஆராதிக்கிறோம். நாங்கள் உம்மை அன்பு செய்கிறோம். இனி வருகிற வருடங்களில் இவ்வுலகில் உள்ள உம் கிறிஸ்தவ சபைகளைத் தக்க வைக்க நாங்கள் ஒன்றுபட்டு போராட எங்களுக்கு வலிமை தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 29 – கிறிஸ்தவ வழிமுறைகளை காக்க உதவும் செபம்**

ஓ என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உம் பரிசுத்த ஆவியை உம் மக்கள் அனைவர் மீதும் பொழிந்தருளுமாறு கெஞ்சி மன்றாடுகிறோம். தங்கள் ஆன்மாக்களில் உம்மை வெறுக்கும் மக்களை மன்னிக்குமாறு நான் உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன். நாத்திகர்களும் தங்கள் கடின இருதயத்தை, உம் மகத்தான கிருபையின் நேரத்தில் திறக்கும்படி உம்மிடம் வேண்டிக் கொள்கிறேன். உம்மை நேசித்து, உம்மை அர்ச்சிக்கும் உம் மக்கள் அனைத்து வாதைகளிலிருந்தும் தகுதியாக எழ கிருபைச் செய்யும். உம் மக்கள் வீரத்தோடு எழும்பி, உம் சேனையை நடத்தி சாத்தானுடனும், அவன் பிசாசுகாளோடும் அவனுடைய பொய்யான வார்த்தைகளை நம்புகிறவர்களோடும், கடைசிப்போர் புரிய அவர்களை உமது ஆவியின் வரத்தினால் நிரப்பும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 30 – பிதாவாகிய சர்வேசுரன் போர், பஞ்சம், வேதகலாகமம் திசைத்திருப்ப செய்யும் செபம்**

ஓ என் நித்திய பிதாவே, சர்வலோகத்தையும் படைத்த தேவனே, உம் திருமகனின் பெயரால், நாங்கள் உம்மை அதிகமாக அன்பு செய்யும் வரத்தை அளித்தருளும் நாங்கள் தைரியத்தோடும், பயமில்லாமலும், திடத்தோடும் மாற்றங்களை எதிர்த்து நிற்க எங்களுக்கு உதவும். இவ்வுலகில் உள்ள உம் மக்களைக் காப்பாற்ற எங்கள் ஒறுத்தல்களையும் வேதனைகளையும் மற்றும் சோதனைகளையும் உம் சிம்மாசனத்திற்கு முன்பாக காணிக்கையாய் பெற்றுக் கொள்ளும். சுத்தமில்லா ஆன்மாக்களின் இருதயத்தைக் கழுவும். உமது அன்பின் உண்மையை அவர்கள் காணவும், உம் அன்பினால் உம் திருச்சித்தத்தின்படி

எங்களுக்காக உருவாக்கி, இனியும் வரப்போகிற புதிய பரதேசத்திற்கு அவர்களும், உம் மக்களோடு வந்து சேர உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் : 31 – பாதுகாப்பு சங்கிலித் தொடர் செபம்**

ஓ என் இயேசுவே, மோகத்தினாலும், பேராசையாலும், பொருளாசையாதலும் மற்றும் பெருமையினாலும் உம்மாசற்ற மக்களை வதைச் செய்யும் தலைவர்கள் மீது உம் பரிசுத்த ஆவியை பொழிய என் செபத்தினால் கெஞ்சிக் கேட்கிறேன் ஏழ்மை, பஞ்சம் மற்றும் போரிலிருந்து உம் மக்களின் வாழ்வை மாற்றியமைக்க உம்மைக் கேட்டுக் கொள்கிறேன் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் உமது உண்மையான அன்புக்கு தங்கள் இருதயத்தைத்த திறந்தருளும்படி வேண்டிக் கொள்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 32 – கருத்தடைச் சட்டத்தை அயர்லாந்தில் தடை செய்ய வேண்டி செபம்**

ஓ இரட்சணியத்தின் மாதாவே, அயர்லாந்தில் உள்ள உம் மக்கள் மீது கருத்தடைச் சட்டம் திணிக்கப்படுவதை தடைச் செய்தருளும். இந்த தேசத்தை இருளிலிருந்து பாதுகாக்குமாறு கேட்கிறேன். இனி பிறக்கப் போகும் உம் குழந்தைகளை அழிக்கும் தீமையிலிருந்து எங்களைக் காப்பாற்றும் தேசத்தலைவர்கள் உம் அன்பு மகனை நேசிக்கும் மக்களின் கோரிக்கைக்குச் செவிக் கொடுக்க அவர்களை திடப்படுத்தும் அவர்களும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றி நடக்க அருள் தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 33 – என் முத்திரையை அங்கீகராம் செய்யவும், அதை அன்புடனும், மகிழ்ச்சியுடனும், நன்றியறிதலுடனும் பெற்றுக் கொள்ள வேண்டிச் செபம்**

என் தேவனே! என் அன்பான பிதாவே! நான் உம்முடைய தெய்வீக பாதுகாப்பின் முத்திரையை அன்புடனும், நன்றியறிதலுடனும் பெற்றுக் கொள்கிறேன். உம்முடைய தெய்வீகம் எனது சரீரத்திலும், ஆத்துமத்திலும் அனாதி சதாகாலமும் ஆளுகை செய்யட்டும். நான் நன்றியறிதலுடன், தாழ்ச்சியுடனும் பணிந்து எனது ஆழ்ந்த அன்பையும் விசுவாசத்தையும் என் அன்புமிகு பிதாவிற்கு அர்ப்பணிக்கின்றேன். என்னையும் என் பிரியமானவர்களையும் இந்த விசேஷித்த முத்திரையினால் பாதுகாக்க வேண்டும் என்று கெஞ்சி மான்றாடுகிறேன். எனது வாழ்வினை உமது ஊழியத்திற்கு சதாகாலமும் காணிக்கையாக்குகிறேன். அன்பின் பிதவே! நான் உம்மை அன்பு செற்கிறேன். நித்திய பிதாவே! எங்கள் ஆண்டவரும் உமது நேச குமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்தையும், உதிரத்தையும்,

ஆன்மாவையும், தெய்வீகத்தையும் அகில உலகத்தின் பாவத்திற்கு பரிகாரமாகவும், உமது பிள்ளைகளின் இரட்சிப்பிற்காகவும் ஒப்புக் கொடுக்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 34 - இயேசுவுக்கு ஒருசந்தியை பரிசளிக்கும் செபம்**

ஓ என் இயேசுவே, மனுக்குலத்தை மீட்க நீர் கொண்ட உம் தியாக வாழ்வை எளிதான வழியில் நான் பரிமாணிக்க எனக்கு உதவும். மனுக்குலத்தைக் காப்பாற்ற தவக்காலம் முழுவதும் வாரத்தில் ஒருநாள் ஒரு சந்தி அனுசரித்து, அதை உமக்கு ஒப்புக் கொடுக்க வரம் அருளும். அதனால் அவர்கள் இவ்வுலகிற்கு வரப்போகிற புதிய பரதேசத்தில் நுழையும் வாய்ப்பை அவர்களுக்கு அருளும் அன்பு இயேசுவே என்னடைய ஒறுத்தலை, இருதயத்தில் அன்புடனும், மகிழ்ச்சியுடனும் ஒப்புக் கொடுக்க என் மீது கிருபையாயிரும். என் அன்பின் ஆழத்தை உமக்குக் காண்பிக்க, உமது அருளை இழந்த ஒவ்வொரு ஆன்மாக்களின் இரட்சிப்பிற்காகவும் என் ஒறுத்தலை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 35 – ஆன்மாக்கள் பரதேசத்தில் நுழைய வேண்டிச் செபம்**

ஓ என் இயேசுவே, இவ்வுலகில் எஞ்சியிருக்கும் உம் மக்களை நீர் மீட்கும் பணியில் நானும் செயலாற்ற எனக்கு உதவி புரியும். இருளின் ஆதிக்கத்திலிருந்து உம் மக்களை நீர் உமது இரக்கத்தால் மீட்டுக் கொள்ள உம்மை வேண்டிக் கொள்கிறேன். என் சோதனைகளையும், வேதனைகளையும் ஆன்மாக்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்ற ஏற்றுக் கொள்ளும். இந்த வேதனைகளை நான் என் இருதயத்தில் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் உமக்கு சமர்ப்பிக்க எனக்கு அருள் தரும் இதனால் நாங்கள் அனைவரும் தூய தமத்திரித்துவத்தோடு அன்பாக ஒருமித்து ஒரே குடும்பமாக பரதேசத்தில் வாழும் கிருபையை எங்களுக்குத் தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 36 – புதிய காலம் என்னும் பிரிவைச் சேர்ந்தவர்கள் மனந்திரும்பும் செபம்**

இயேசவே, தொலைந்தும், கலங்கியும், இருக்கும் எனக்கு உதவும். மரணத்திற்கு பின்வரும் வாழ்வின் சத்தியம் எனக்குத் தெரியாது. மெய்யான தேவனாகிய உம்மைத் தவிர்த்து பொய்யான தேவர்களை நான் வணங்கியதால் நான் உம்மை வேதனைப்படுத்திய பாவங்களை மன்னித்தருளும். என் ஆன்மாவில் உள்ள இருளை நீக்கி, உண்மையைத் தெளிவாகக் காண எனக்கு உதவும். உம்முடைய இரக்கத்தின் ஒளியை நான் வந்தடையும் பாக்கியத்தை எனக்குத் தாரும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 37 – அனைத்து தேவமக்களும் ஒன்றுசேர வேண்டிச் செபம்

ஓ அன்பான இயேசுவே, சத்திய நேசத்துடன் உம்மைப் பின்பற்றும் மக்களை ஒன்று கூட்டியருளும். அதனால் நாங்கள் உம் நித்திய இரட்சிப்பின் உண்மைச் சத்தியத்தை உலகம் முழுவதும் பரப்ப அருள் தாரும். தங்களுடைய ஆவி, ஆன்மா, சரீரத்தை உமக்கு ஒப்புக் கொடுக்க பயப்படும் வெதுவெதுப்பான ஆன்மாக்கள் தங்கள் பெருமையை கைவிடவும், அவர்கள் இருதயத்தை உம் அன்பிற்கு திறந்து அவர்களையும் இவ்வுலகில் உள்ள உம் திருக்குடும்பத்தின் அங்கத்தினர்களாக்கும்படி உம்மை வேண்டிக் கொள்கிறோம். அன்பு இயேசுவே, வழி தப்பிய ஆன்மாக்களை நீர் அரவணையும். நாங்கள் அவர்களது சகோதர, சகோரரிகள் என்பதை எங்கள் அன்பினால் அவர்களுக்குக் காட்டவும், வறட்சியான நிலத்திலிருந்து அவர்களைத் தூக்கியெடுத்து தூயத் தமத்திரித்துவத்தின் கொழுமைக்கும், அன்புக்கும், ஒளிக்கும், அவர்களை நாங்கள் கூட்டிவர உதவும் எங்களுடைய நம்பிக்கை, விசுவாசம், தேவசிநேகம் அனைத்தையும் உம் திருக்கரங்களில் ஒப்படைக்கிறோம். நாங்கள் உம்மை அதிகமாக ஆராதனை செய்யவும், அதனால் இன்னும் அதிகமான ஆத்துமாக்களை உம்மிடத்தில் கூட்டிச் சேர்க்கவும் எங்களுக்கு வரம் அருளும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 38 – கத்தொலிக்க திருச்சபையை இரட்சிக்க வெண்டிச் செபம்

ஓ வணக்கத்திற்குரிய இரட்சணியத்தின் மாதாவே, இந்த இக்கட்டான வேளையில் கத்தோலிக்க திருச்சபையையும், எங்கள் அன்புக்குரிய திருதந்தை 16ம் பெனடிக்ட் அவர்களும் படும் வேதனைகளிலிருந்து மீட்டருளும். இரட்சிப்பின் மாதாவே, தேவனின் திருத்தொண்டர்களை உம் பரிசுத்த முக்காட்டினால் மூடி அவர்கள் சோதனைகளை மேற்கொள்ள அவர்களுக்குத் தேவையான திடம், சக்தி மற்றும் உண்மையை கொடுக்க வேண்டிக் கொள்கிறோம். அவர்கள் தங்கள் மந்தையை கத்தொலிக்கத் திருச்சபையின் மெய்யான போதகத்தின் முறைப்படி வழி நடத்தக் கேட்டுக் கொள்கிறோம். ஓ தேவனின் பரிசுத்த மாதாவே, இவ்வுலகில் எஞ்சியிருக்கும் உம் திருச்சபைக்கு தலைமை பதவியை அளித்து, உம் குமாரனுடைய ராஜ்யத்திற்குள் அனைத்து ஆன்மாக்களையும் கூட்டிவர அருள் தாரும். இரட்சணியத்தின் மாதாவே, உம் குமாரனை பின்பற்றும் கிறிஸ்தவர்களிடமிருந்து, ஏமாற்றுக்காரனை தள்ளிவையும். அவர்கள் தங்கள் ஆன்மாவை பாதுகாத்து வாயிலில் நுழையும் தகுதியை அவர்களுக்கு அளித்தருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 39 - இயேசுவின் மக்கள் தங்கள் ஆன்மாவை பதிய பரதேசத்திற்கும், அவருடைய இரண்டாம் வருகைக்கும் தயார் செய்ய வேண்டிச் செபம்**

ஓ இயேசுவே, என் அன்பிற்குரிய இரட்சகரே, என்னை உம் பரிசுத்த ஆவியானவரால் சூழ்ந்துக் கொள்ளும். அதனால் தேவமக்களை உம் இரண்டாம் வருகைக்கு தயார் செய்ய உம் பரிசுத்த வார்த்தைகளை அதிகாரத்தோடு அறிவிக்க எனக்கு உதவி செய்யும். ஆண்டவராகிய இயேசுவே நான் போகுமிடமெங்கும் உள்ள அனைத்து விதமான நம்பிக்கை, விசுவாசம் நிறைந்த தேசத்தார் அனைவரையும் தொட, உம்மைக் கெஞ்சிக் கேட்கிறேன். என் உதடுகளினால் உமது வார்த்தையைக் கொண்டு நான் பேசும் போது, அவர்களது ஆன்மா குணமடைவதாக. உம் திருநாவின் மொழி பேச எனக்கு உதவி புரியும். அதனால் எளியவர்கள் ஆறுதலடைவார்களாக.

உமது திரு இருதயத்திலிருந்து ஊற்றப்படும் விசேஷித்த தெய்வீக அன்பினால் அனைத்து ஆன்மாக்களையும் நான் அன்பு செய்ய உதவும். உம் திரு இருதயத்திற்கு அருகாமையில் உள்ள ஆன்மாக்களைக் காப்பாற்ற எனக்கு உதவும். அன்பு இயேசுவே தவறிப்போன ஆன்மாக்களை உம் இரக்கத்தை நிராகரிக்கப்பதினால் உம்மைத் தேற்ற எனக்கு உதவும். இயேசுவே நீரல்லாமல் நான் ஒன்றுமில்லை. உம் அளவிற்கரிய உதவியினால், மனுக்குலம் முழுமை அடையயும் உம் பெயரால் காப்பாற்றப்பட நான் போராடுவேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 40 – தேவபணியாளர்கள் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆன்மாக்களை தயார் செய்ய வேண்டிச் செபம்**

ஓ என் இயேசுவே, நான் உம் தாழ்மையான ஊழியன். நான் உம் மகிமையான திருவருகைக்கு ஆன்மாக்களை தயார் செய்ய என்னை நீர் வழிநடத்தும். உம் திருச்சித்தத்தின்படி ஆன்மாக்களை மனமாற்றி, தயார் செய்யவும், மனுக்குல மீட்பிற்காக நீர் சிலுவையில் மரித்ததினால் நீர் அவர்களுக்குப் பெற்றுத் தந்த புதிய வானம் மற்றும் புதிய பூமிக்குள் நுழைய அவர்களை தகுதியுள்ளவர்களாக்கும்படிக்கும் எனக்கு உதவும். விடாய்த்த ஆன்மாக்களுக்கு, உம் வார்த்தைகளை அருளும் பாக்கியத்தை எனக்குத் தாரும். அன்பு இயேசுவே, நான் உமக்கு செய்யும் ஊழியத்தை ஒருபோதும் தள்ளிவிடாதிருக்க என்னுடைய சார்பை பரிசுத்த கட்டளையாக உம்மிடம் அர்ப்பணிக்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 41 – நம்பிக்கையற்ற ஆன்மாக்களுக்காக வேண்டிச் செபம்**

ஓ என் இயேசுவே, உம் இரட்சிப்பின் சத்தியத்திற்கு தங்கள் கண்களை மூடிக் கொண்டுள்ள உம் பரிதாபத்துக்குரிய மக்களுக்கு உதவி செய்யும். என் செபங்களினாலும், வேதனைகளினாலம் நம்பிக்கையற்றவர்களின் கண்களைத் திறந்து, அவர்கள் உமது மென்மையான அன்பைக் கண்டு, உம் பரிசுத்த கரங்களின் பாதுகாப்புக்குள் ஒடி வருவார்களாக. உண்மையை கண்டு பாவமன்னிப்பு பெற அவர்களுக்கு உதவி புரியும். அதனால் அவர்கள் காப்பாற்றப்பட்டு, புதிய பரதேசத்தின் வாயிலினுள் முதலாக நுழைவார்களாக. ஆண், பெண், குழந்தைகளாகிய இந்த பரிதாபத்துக்குரிய ஆன்மாக்கள், அவர்கள் பாவங்களிலிருந்து பாவமன்னிப்பு பெற அவசரமாய் வேண்டிக் கொள்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 42 – ஒரே உலகப்பணம் உருவாவதை தடுக்க வேண்டி உபவாச செபம்**

ஓ அதி உன்னத தேவனே, என் உபவாசத்தின் பலனை உமக்குக் காணிக்கையாக்குகிறேன். இவ்வுலகில் உள்ள தீமையின் கரங்கள் என் தேசத்தின் உணவிற்கும், உயிருள்ள அப்பத்திற்கும் பஞ்சம் வருவிப்பதிலிருந்து தடுத்தருளும். அந்தி கிறிஸ்துவின் திட்டங்களினால் வதைபடும் பிற தேசங்களையும் காப்பாற்ற என் காணிக்கையை ஏற்றுக் கொள்ளும் அன்பு தேவனே, இத்தீமையிலிருந்து எங்கள் விசுவாசத்தை நாங்கள் காத்துக் கொள்ளவும், அதனால் கிடைக்கும் விடுதலையினால் நாங்கள் என்றென்றும், அநாதிசதாகாலமும் உம்மை மகிமைப்படுத்தவும், அன்பு செய்யவும், ஆராதிக்கவும் வேண்டுகிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 43 – எச்சரிக்கையின் போது ஆன்மாக்களை காப்பாற்ற வேண்டிச் செபம்**

ஓ அதி உன்னத பிதாவாகிய தேவனே, எங்களை பாவங்களிலிருந்து காப்பாற்ற உம் அன்பு மகன் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததை நினைவு கூறுகிற நாங்கள், எச்சரிக்கையின் வேளையின் போது தங்கள் சாவான பாவங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இயலாத ஆன்மாக்களை காப்பாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன். உம் அன்பு மகனின் பாடுகளின் வழியாக தங்கள் பாவமன்னிப்பைத் தேடாமல் இருக்கிறவர்கள் போதிய வேளை இல்லாததால் உம் மகன் இயேசுவின் இரக்கத்தினால் தங்கள் பவங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள இயலாமல் தவிக்கும் இருக்கும் ஆன்மாக்களுக்கு உம் இரக்கத்தை பொழியுமாறு மன்றாடுகிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 44- கள்ளத்தீர்த்தகரிசிக்கு எதிராக என் நம்பிக்கையை பலப்படுத்த வேண்டிச் செபம்**

அன்பு இயேசுவே, நீா் எங்களுக்கு கற்றுக் கொடுத்த போதனைகளின் மீது ஒருமனப்படும் திடத்தையும், உமது புனித வார்த்தைகளை எப்போதும் பிரசங்கிக்கவும் அருள் தாரும். உம்மைப் போல தன்னைக் காட்டிக் கொள்கிற கள்ளத்தீர்க்கதரிசியை ஒரு போதும் நான் நம்பி விடாமல் என்னைக் காத்தருளும். என்னில் உம் அன்பை பலப்படுத்தும். புனித வேதாகமத்தில் உள்ள உண்மைகளை பகுத்தறியும் அறிவையும், எப்பேர்பட்ட பொய்யான காரியங்கள் என் முன் காட்டப்பட்டாலும் உமது மெய்யான சத்திய வார்த்தைகளிடம் நான் திரும்பும்படிச் செய்யும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 45 – எதிர்மறையான நினைவுகளை வெல்லவேண்டிச் செபம்

ஓ இயேசுவே, நான் உம்மைப்பற்றி சிறிதே அறிந்திருக்கிறேன். ஆனால் என் இருதயத்தை நீர் திறந்து என் ஆன்மாவில் கலந்து என்னை உம் சமாதானத்தினால் குணமாக்கவும், தேற்றவும் மற்றும் நிரப்பவும் என்று வேண்டுகிறேன். நான் சந்தோஷத்தை உணரவும், எதிர்மறையான நினைவுகளை வெற்றிக் கொள்ளவும், உம்மை மகிழ வைக்கும் வழிகளை அறிந்து கொள்ளவும் செய்யும். இதன் பொருட்டு நாங்கள் உம் புதிய பரதேசத்தில் நுழையவும், அங்கு அன்பான, சந்தோஷமான, ஆச்சரியமான வாழ்வு என்றென்றும் அநாதி சதாகாலமும் உம்மோடு சேர்ந்து வாழ வகை செய்யும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 46 – சாத்தானின் கட்டுக்களிலிருந்து விடுவிக்க வேண்டிச் சேபம்

ஓ இயேசுவே, நான் தப்பிக்க முடியாத வலையில் அகப்பட்ட நினைவால் மிகவும் கலங்கி என்னை இழந்து போயிருக்கிறேன். சாத்தினிடமும் அவனுடைய படைகளின் கட்டுக்களிலிருந்தும் என்னைத் தேற்றி, விடுதலை செய்வீா் என்று இயேசுவே உம்மை நான் நம்புகிறேன். என் மனதை நான் இழந்து போயிருப்பதிலிருந்து எனக்கு உதவி செய்யும். நான் உம் மேல் நம்பிக்கை மற்றும் விசுவாசம் வைப்பதில் என்னை உம் அன்பினால் திடப்படுத்தியருளும் நான் இந்த தீமையிலிருந்து காப்பாற்றப்பட்டு ஒளியில் வழி நடத்தப்படுவேனாக. அதனால் எனக்கு சமாதானம், அன்பு, மகிழ்ச்சி கிடைக்கும்படி அருள் புரியும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 47 - இயேசுவின் மேல் கொண்டுள்ள அன்பை மேலும் தூண்ட வேண்டிச் செபம்

ஓ வணக்கத்திற்குரிய மாதாவே, உலக இரட்சணியத்தின மாதாவே இயேசுவின் மேல் நான் கொண்டுள்ள அன்பு மேலும் தூண்டப்பட வேண்டிக் கொள்ளும். அவருடைய அனப்புத்தீ என் ஆன்மாவை நிரப்ப உதவும். இயேசுவை

நான் இன்னும் அதிகமாக நேசிக்க உதவும் அவர் மேல் நான் கொண்டுள்ள விசுவாசம். அன்பு, பக்தி மற்றும் வலிமை அடைய வேண்டிக் கொள்ளும். என்னை வதைக்கும் சந்தேகங்களை சரி செய்து உம் அன்பு மகனும், மனுக்குலத்தின் இரட்சகருமாகிய இயேசுவின் தெய்வீக ஒளியின் உண்மையை நான் தெளிவாக கண்டு உணரச் செய்யும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 48- கிறிஸ்தவின் இரண்டாம் வருகையை அறிக்கைச் செய்யும் வரத்துக்காக செபம்**

ஓ என் இயேசுவே, ஆன்மாக்கள் காப்பாற்றப்பட உம் பரிசுத்த வார்த்தைகளை பிரசங்கிக்கும் வரம் அருளும். உம் தாழ்மையான ஊழியர் மீது உமது பரிசுத்த ஆவியை பொழிந்தருளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதனால் உம் இரக்கம் அதிகமாகத் தேவைப்படும் ஆன்மாக்கள் உம் பரிசுத்த வார்த்தைகளை கேட்டுப் பெற்றுக் கொள்வார்களாக. உம் திருச்சித்தத்தை எந்நேரமும் மரியாதை செய்யவும், உம் இரக்கத்தின் கரத்தை ஒதுக்குவோர்களை நான் ஒரு போதும் வேதனைப்படுத்தாமலும், ஒதுக்காமலும் இருக்க உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 49- கிறிஸ்தவ மறைபரப்பு பணியாளர்களின் உண்மைச் சாாபின் உறுதிப்பாடு**

ஓ இயேசுவே, நான் உம் தாழ்மையான ஊழியன். என் அன்பையும் உண்மைச் சார்பையும் உமக்கே உறுதிப்பாடு செய்கிறேன். உமது தேவ அழைத்தலின் அடையாளத்தை எனக்குக் காட்டும். என் கண்களைத் திறந்து, உம் சத்தியத்தின் சாட்சியை காண உதவும். என்னை பரிசுத்த ஆவியின் வரங்களினால் ஆசீர்வதித்து, உம் நாமத்தைத் தரித்துக் கொண்டு சத்தியத்தை பேசாமல் வருகிறவனுடைய பொல்லாதவனுடைய ஏமாற்று வேலைக்கு விலக்கி விடும். உண்மையை எனக்கு காண்பியும். உமது மேலான பரிசுத்த சித்தத்தை நான் பரிபூரணமாக்க, உம் அன்பை நான் உணரச் செய்தருளும். உமது மனுக்குல ஆன்ம இரட்சிப்பிற்கு நான் என்னாலியன்ற அளவு உதவ எனக்கு வழிகாட்டியருளுமாறு தாழ்மையான இருதயத்தை கேட்டுக் கொள்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 50 - இயேசுவே நீா யாரென்பதை நான் உணர வேண்டிச் செபம்**

ஓ அன்பு இயேசுவே, நீர் யாரென்பதை நான் உணர எனக்கு உதவும். இதுவரையிலும் உம்மோடு நான் பேசாமல் இருந்ததற்காக என்னை மன்னிக்கவும். இவ்வுலக வாழ்வில் நான் சமாதானத்தை கண்டடையவும், நித்திய வாழ்வின் உண்மையைக் காணவும் உதவும். என் இருதயத்தைத் தேற்றியருளும். எனது

கவலைகளைக் குறைத்து விடும். சமாதானத்தை எனக்குத் தாரும். என் இருதயத்தைத் திறந்து, என் ஆன்மாவை உம் அன்பினால் நிரப்பும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 51 – பரிசுத்த ஆவியின் வரத்திற்காக செபம்**

ஓ பரிசுத்த ஆவியானவரே இறங்கி வாரும். உமது அன்பு, ஞானம் மற்றும் அறிவு ஆகிய வரங்களை எளிமையான என் ஆன்மாவின் மீது பொழிந்தருளும் சாத்தானும், அவன் தூதர்களும் பரப்பும் பொய்யான வார்த்தைகளிலிருந்து தேவனின் மெய்யான வார்த்தைகளை பகுத்தறிய உண்மையின் ஒளியினால் என்னை நிரப்பும். விளக்குத் தண்டை பெற்றுக் கொண்டு, அதை புரிந்து கொள்ளுகிற ஒளியை, நான் சந்திக்கும் அனைவருக்கும் நமது ஆண்டவராகிய கிறிஸ்துவின் வழியாய் பரப்ப உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 52 – பிதாவாகிய சர்வேசுரனிடம் செபம்**

என் அன்புப் பிதாவே, விலை மதிக்க முடியாத உமது திருக்குமாரனின் சிலுவைப்பாடுகளின் வழியாக உம்மை அழைக்கிறேன். அதி உன்னத தேவனே, இவ்வுலகையும் மற்றும் சர்வத்தையும் படைத்தவரே, எங்கள் இரட்சிப்பை உம் கரங்களில் ஏந்தியருளும். உம்மை அறியாத மக்களையும் உம்மை பாாக்கும் போது மறுபக்கம் திரும்பும் மக்களையும், அணைத்துச் சேர்தருளும். எங்கள் பாவங்களை மன்னித்து, சாத்தான் மற்றும் அவன் படைகளின் வாதைகளிலிருந்து எங்களை பாதுகாத்தருளும். எங்களை உம் திருக்கரங்களில் ஏந்தி, எங்களுக்குத் தேவையான உம் சத்திய வழியின் நம்பிக்கையினால் எங்களை நிரப்பியருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 53 – கத்தோலிக்கத் திருச்சபைக்காக செபம்**

ஓ பிதாவாகிய தேவனே, கத்தோலிக்க குருமார்கள் தங்களுக்கு நேரிடும் வார்த்தைகளை பொறுமையோடு சகிக்கும் திடனை உம் அன்பு மகனின் திருநாமம் வழியாக வழங்குமாறு கெஞ்சி மன்றாடுகிறோம். உம் திருக்குமாரன் இயேசுகிறிஸ்துவின் போதனைகளை அவர்கள் பின்பற்றவும், சற்பிரசாத திவ்விய நற்கருணையை பற்றிய விசுவாசத்தைத் தள்ளிவிடாமலும், சோர்ந்து போகாமலும், அதைப் பற்றிய பொய்யான வதந்திகளில் விழுந்து விடாமலும் இருக்க அவர்களுக்கு உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 54 - மூன்றாம் உலகப்போரை தவிர்க்குமாறு பிதாவாகிய சர்வேசுரனிடம் செபம்**

ஓ பரலோகத்திலிருக்கிற பிதாவே, நாங்கள் எதிர் கொள்கிற கடுமையான வேளைகளில் மனுக்குலத்தின் பாவங்களுக்குப் பரிகாரமாக கடும்

வேதனைகளுக்குள்ளாகிய உம் அன்பு மகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எங்களுக்கு உதவுமாறு வேண்டிக் கொள்கிறோம். உம் திருச்சபையையும், உம் மக்களை அழிப்பதற்காகவும் உருவாக்கப்படும் பேராசை பிடித்த ஆளுநர்களின் வாதையின் திட்டங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றும். அன்புப் பிதாவே, எங்கள் குடும்பங்களை பராமரிக்கவும், விருப்பமில்லாமல் போருக்குச் செல்ல வற்புறுத்தப்படும் உயிர்களைக் காப்பாற்றவும் வேண்டுமென்று உம்முன் தாழ்பணிந்து வேண்டிக் கொள்கிறோம். அன்பு பிதாவே, நாங்கள் உம்மை நேசிக்கின்றோம். எங்களின் தேவையான நேரங்களில் உதவி செய்ய வாரும். அந்தி கிறிஸ்துவின் பிடியிலிருந்து எங்களைக் காப்பாற்றும் அவனுடைய முத்திரையையும், மிருகத்தின் முத்திரையையும் நாங்கள் மறுத்து, பெற்றுக் கொள்ளாமலிருக்க எங்களுக்கு உதவும். உம் திருவார்த்தைகளுக்கு நாங்கள் என்றென்றும் உண்மையோடு விளங்க எங்களுக்கு உதவும். அதனால் ஆத்துமத்திலும், சரீரத்திலும் பிழைக்கும் வரத்தை எங்களுக்கு அருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 55 – எச்சரிக்கைக்கு தயாராக வேண்டிச் செபம்**

ஓ என் அன்பு இயேசுவே, தேவனின் மக்களுக்கு உம் அளவில்லாத இரக்கம் கிடைக்கத்தக்கதாக எங்களின் இருதயத்தைத் திறந்தருளும். உம் தேவ இரக்கத்தை அன்புடனும், நன்றியறிதலுடனும் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு உதவும். உமக்கு முன் எங்களைத் தாழ்த்தவும் எங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டவும் அதனால் உம் மகிமையின் ராஜ்யத்தின் அங்கமாக விளங்க எங்களை மாற்றியமைக்குமாறு வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 56 – கத்தோலிக்க குருமார்கள் சற்பிரசாத திவ்விய நற்கருணையைக் காப்பாற்ற வேண்டிச் செபம்**

ஓ அன்பு பிதாவே, நான் என்றும் உண்மை சாட்சியாக இருக்க மனுக்குலத்திற்காக தன்னைத்தானே சிலுவையில் பலியாக ஒப்புக் கொடுத்த உம் திருமகனின் நாமத்தினால் கேட்கிறேன். உம் திருமகனின் இரத்தத்தினால் என்னை மூடி, என் எஞ்சிய ஊழியத்தில் உமக்கு விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும், உத்தமத்தோடும் ஊழியம் புரியும் அருளைத் தாரும். திருப்பலியின் உண்மையான அர்த்தத்திலிருந்தும், உம்மக்களுக்கு திவ்விய நற்கருணை வழங்குவதிலிருந்தும் என்னைப் பிரிந்து போக விடாதேயும். உம் பிரதிநிதியாக என்னைத் திடப்படுத்தியருளும். உம் திருமகனும், மனுக்குலத்தின் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தாலும் இரத்தத்தாலும், ஆத்துமாவாலும், தெய்வீதத்தாலும் உம் மக்களை தகுதியான முறையில் போஷிக்கவும், வழி நடத்தவும் எனக்கு அருள் தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 57 – மறைபரப்பு பணியாளர்களுக்காக செபம் இயேசுவே உம் அழைத்தலை நான் கேட்க வேண்டும்.**

ஓ என் அன்பு இயேசுவே, உம் சத்தத்திற்கு என் காதுகளைத் திறந்தருளும். உம் அன்பு அழைத்தலுக்கு என் இருதயத்தைத் திறந்தருளும். இவ்வேளையில் நான் உம்மை உணர்ந்து கொள்ள பரிசுத்த ஆவியானவரை என் உள்ளத்தில் நிரப்பும். நீர் என்னிடத்தில் கேட்டுக் கொள்கிற அனைத்து நட்புறவையும் தாழ்ச்சியுடன் வழங்குகிறேன். உண்மையைப் பகுத்தறிந்து, எழுந்து, பதிலளித்து உம் சத்தத்தைத் தொடரவும், அதனால் மனுக்குலம் முழுவதையும் நீங்கள் காப்பாற்ற என்னை அர்ப்பணிக்கிறேன். உம் சித்தம் எனக்கு கட்டளை. நீர் என்னை வழிநடத்த நான் திடப்படவும் அதனால் உம் திருச்சபையை உம் புதிய ராஜ்யத்திற்குள் அழைத்துக் செல்ல தேவையான கேடகத்தை நான் எடுத்துக் கொள்வேனாக. ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 58 – மனமாற வேண்டி சிலுவைப் போர் செபம்**

ஓ அன்பு இயேசுவே, உம் மக்களைக் கூட்டியணைத்து அவர்களை உம் விலை மதிக்க முடியாத இரத்தத்தினால் சூழ்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். உம் ஒவ்வொரு துளி இரத்தமும், ஒவ்வொரு ஆன்மாவையும் கேடகமாக மூடி பொல்லாங்கானவனின் தீமைகளிலிருந்து காக்கட்டும். பெருமையின்பாவத்தினால் தங்கள் ஆன்மாவை கறைபடுத்தி, கடினமாக்கிக் கொண்டுள்ள அனைத்து மக்களின் இருதயத்தையும் திறந்த உமது அன்பின் ஒளி வெள்ளத்தை அவர்கள் ஆன்மாவில் பாய்ச்சவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம். உண்மைக்காண அவர்கள் கண்களைத் திறந்தருளும். அதனால் உம் தேவ இரக்கம் அவர்கள் மேல் பொழியப்படவும், உம் இரக்கத்தின் கதிர்களால் அவர்களை மூடவும் செய்யும். அன்பு இயேசுவே, ஆன்மாக்கள் இரட்சிப்படைய நான் வேண்டிக்கொள்ளும் ஆசீர்வாதத்தை எனக்குத்தாரும். (தனிப்பட்ட தேவைகளைக் கூறவும்). உம் இரக்கத்தை வேண்டி உபவாச செபத்தை வாரத்தில் ஒரு நாள் (ஜீன் மாதம்) அனைத்து பாவங்களுக்கும் பரிகாரமாக உமக்கு ஒப்புக் கொடுக்கிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 59 – பிதாவாகிய தேவனுடைய திருச்சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்கும் உறுதிமொழி**

என் பிரியமான மகளே, என் நித்திய பிதா தன் முத்திரையை மனுக்குலத்திற்கு பெரிதான பரிசாக அளித்திருப்பதினால் அவர் மக்கள் அவருடைய திருச்சித்தத்திற்கு தங்கள் நட்புறவை அங்கீகாரம் செய்ய வேண்டும். தேவனுடைய சேனையில் சேர்ந்து அவருடைய மக்களின் ஆன்மாக்களைக் காப்பாற்றவும்

கடினமனம் உள்ளவர்களின் ஆன்மாக்களையும் காப்பாற்றவும் இந்த அங்கீகாரத்தை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

“ஓ அதி உன்னத தேவனே, ஓ பரலோகப் பிதாவே, இவ்வுலகிலுள்ள உம் அனைத்து தேவசித்தங்களுக்கும் நான் பணிந்து என்னுடைய ஆணித்தரமான உடன்பாட்டை அங்கீகாரம் செய்கிறேன். என் மனம், சரீரம் மற்றும் ஆன்மாவை அனைத்து ஆன்மாக்களுக்கும் பரிகாரமாக உம் ஒரே அன்பு மகன், உண்மையான மேசியாவின் திரு இரத்தத்தின் வழியாக ஒப்படைக்கிறேன். இதனால் நாங்கள் அனைவரும் ஒருமித்து உம் பரலோக இராஜ்யத்திற்குள் வந்து சேரவும், உம் திருச்சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதைப் போல பூலோகத்திலும் செய்யப்பட அருள்தாரும். ஆமென்.”

நீங்கள் உங்கள் ஆன்மாவை என் பரலோகப் பிதாவுக்கு விசுவாசத்தின் அடையாளமாகவும், என் சிலுவை மரணத்தின் வழியாகப் பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் பாத்திரத்திலிருந்து பருகவும் இந்த அங்கீகாரத்தை நீங்கள் செய்ய வேண்டும்- இயேசு.

**சிலுவைப் போர் செபம் : 60 – எச்சரிக்கையின் போது குடும்பங்கள் மனமாற வேண்டிச் சேபம்**

இயேசுவாகிய நான், என் அன்பு மகளிடம் என்னைப் பின்பற்றுகிறவர்கள் என் வழிமுறைகளை கைக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என் போதனைகளைப் பின்பற்றாத உங்கள் குடும்பங்களிலுள்ள ஒவ்வொருவரையும், உங்களிடையே உள்ளவர்களையும் பாருங்கள், பிறகு அவர்களுக்காக கடினமான இவ்வேளையில் செபிக்குமாறு கேட்கிறேன். அவர்கன் ஆன்மாவுக்காக இரக்கத்தைத் கெஞ்சிக் கேளுங்கள். உங்கள் செபங்களும், தியானங்களும் எச்சரிக்கை வேளையின் போது நடைபெறும் சுத்திகரித்தலின் நேரத்தின் கஷ்டங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும். எச்சரிக்கை நேரத்தில் பயப்படத் தேவையில்லை, என்னுடைய விசேஷித்த பரிசாக வரவேற்க வேண்டிய வேளையில், கிருபையின் நிலையில் இல்லாத ஆன்மாக்களுக்கும் எச்சரிக்கை ஒரு மகிழ்ச்சியான தருணமாக விளங்கப் போவதால், உங்கள் ஆன்மாவை முன்னதாகவே தயார் செய்யுங்கள். பாவ சங்கீர்த்தனம் என்னும் தேவதிரவிய அனுமானத்தை **முறையாக** கடைப்பிடிக்கும் ஆன்மாக்கள், கிருபையின் நிலையில் இருப்பதால் அவர்கள் வேதனைப்படமாட்டார்கள். எச்சரிக்கைக்கு பிறகு உத்தரிக்கும் போது ஆன்மாக்களுக்கு அவர்களுடைய திடம் உதவி செய்யும். என் (இயேசு) தினசரி தேவ இரக்க செபமாலையை எவ்வேளையில் செவியுறாத ஆன்மாக்களுக்கு கையளித்து உதவுங்கள். உங்கள் குடும்பத்தினருடைய பாவங்களுக்குப் பரிகாரமாக உங்கள் இயேசுவாகிய எனக்கு ஒரு பரித்தியாகம் செய்யுங்கள். எச்சரிக்கையின்

போது பாவங்கள் வெளிப்படுத்தப்படும் நிலையில் தங்கள் ஆன்மாவின் இருளான நிலையை ஒப்புக் கொள்பவர்களுக்கு நான் இரக்கம் காட்டுவேன். மெய்யான தாழ்ச்சியும், பரிசுத்த இருதயமுள்ளவர்கள் மட்டுமே மன்னிக்கப்படுவார்கள். என்னை (இயேசுவை) தள்ளி வைத்துள்ள மக்களுக்கு உங்கள் செபம் அதிகமாக தேவைப்படுகிறது. தேவனின் மக்களே, அனுதினமும் தேவனின் எச்சரிக்கைக்கு ஆயத்தப்படுங்கள். அது எந்நேரமும் நடைபெறலாம்.

ஓ இனிய இயேசுவே, என் குடும்பத்தினருடைய ஆன்மாக்களுக்கு இரக்கத்தைக் கெஞ்சி மனன்றாடுகிறேன். (பெயர் சொல்லவும்) என்பாடுகளையும், சோதனைகளையும், செபங்களையும் அவர்களுடைய ஆன்மாவை இருளின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்ற உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். உம் மக்களில் ஒருவர் கூட உம் இரக்கத்தின் கரத்தை மறுத்து விடாமலும் நிராகரித்து விடாமலும் இருக்கும் படிச் செய்யும். தங்கள் இருதயங்களைத் திறந்து உம் திரு இருதயத்தோடு ஒருங்கிணைக்கவும், அதனால் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றப்பட அவர்களுக்கு தேவையான பாவ மன்னிப்பைத் தேடி, கண்டைடைவார்களாக. தங்களை சீரமைக்கவும் உம் இரக்கத்தின் ஒளிக்கதிர்களால் மனம் மாறவும் தேவையான வாய்ப்பை அவர்களுக்கு அருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 61 – உலக முழுவதையும் ஒரே ஆளுகையின் கீழ் கொண்டுவரும் திட்டத்தைத் தவிர்க்க செபம்**

ஓ அன்பான பரலோகப் பிதாவே, உம் அன்புத் திருமகன் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறைப்பட்டதை நினைவு கூர்ந்து, உம் மக்களை அழிப்பதற்காக சிலுவையில் எங்களை அறையப்படும்படி சாத்தானும், அவனைப் பின்பற்றுவோரும் உருவாக்கும் திட்டங்களிலிருந்து எங்களைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொள்கிறோம். மிருகத்தின் முத்திரையை மறுக்கத் தேவையான வரங்களையும், சாத்தானை பின்பற்றுவோர் இவ்வுலகில் பரப்பும் தீமையை எதிர்த்துப் போராட உதவியையும், எங்களுக்கு அளித்தருளும். அன்பு பிதாவே இந்த பொல்லாத நேரத்தில் உம் அனைத்து மக்களையும் பாதுகாக்கவும், எந்நேரமும் உம் பரிசுத்த திருவார்த்தைகளை எடுத்துறைக்கத் தேவைாயன திடத்தை எங்களுக்குத் தந்தருளுமாறு உம்மை மன்றாடி கேட்டுக் கொள்கிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 62 – காணாமல் போன மற்றும் உதவியின்றி தவிக்கும் ஆன்மாக்களுக்கானச் செபம்**

ஓ இயேசுவே நான் காணாமல் போன, உதவியின்றி தவிக்கும் இருளிலிருக்கும் பாவியாயிருப்பதால், எனக்கு உதவி செய்யும். நான் பலமில்லாமலும், உம்மைத் தேடும் வலுவில்லாமலும் இருக்கிறேன். இப்பொழுது நான் உம்மை நோக்கி அழைக்கவும் அதனால் நான் என் ஆன்ம இருளிலிருந்து

நான் வெளிவரவும் செய்யும். அன்பு இயேசுவே, உமது ஒளியினிடத்திற்கு என்னைக் கொண்டு வாரும் என்னை மன்னியும். நான் மீண்டும் முழுமை அடையவும், உம் அன்பு, சமாதானம், நித்திய வாழ்வுக்கு என்னை அழைத்துச் செல்லவும் உதவும். நான் உம்மை பரிபூரணமாக விசுவாசிக்கிறேன். என் மனம், சரீரம், ஆன்மா அனைத்தையும் உம் திரு இரக்கத்திற்கு அர்ப்பணம் செய்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 63 - இந்த இவ்வுலக பயணத்தில் என்னைக் காத்தருள வேண்டிச் செபம்**

ஓ என் அன்பக்குரிய இரட்சண்யத்தின் மாதாவே தேவனின் அனைத்து மக்களையும் காப்பாற்ற வேண்டிய இந்த பயணத்தில் என் வாழ்வுக்குத் தேவையான உணவைத் தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பொய்யான விக்கிரகங்களையும், தேவர்களையும் நம்பி ஏமாந்து போயிருப்பவர்கள் தங்கள் கண்களை திறந்து உம் திருமகனின் சிலுவை மரணத்தின் சத்தியத்தை உணரவும் ஒவ்வொரு தேவ மக்களின் ஆன்மாவும் நித்திய வாழ்வுக்கு வந்து வந்து சேரவும் உதவியருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 64 – என் சகோதர, சகோதரிகள் காப்பாற்றப்பட வேண்டிச் செபம்**

ஓ என் பிரியமான இரட்சகரே, இயேசுகிறிஸ்துவே, என் சகோதரர்களும், சகோதரிகளும் இருக்கும் இருளின் சிறைச்சாலையிலிருந்து காப்பாற்றப்பட என்னுடைய செபங்களையும், தியாகங்களையும் ஏற்றுக் கொள்ளும். அவர்கள் ஆன்மாவை மீட்க என்னை ஒரு கருவியாக பயன்படுத்தி அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்கள் ஆன்மா பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப் படவும். அதனால் அவர்கள் முழுமையாக தொலைந்து, காணாமல் போவதற்கு முன்பே அவர்களுக்கு மிகவும் தேவையான உம் கரங்களுக்குள் அடைக்கலம் பெறவும் வேண்டிக் கொள்கிறேன். இது போன்ற ஆன்மாக்களுக்காக தாழ்மையான சேவைகளை நன்றியறிதலுடன் உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 65- சாவான பாவங்களில் அமிழ்ந்து இருப்போருக்காகச் செபம்**

என் அன்பு இயேசுவே, மனுக்குல இரட்சகரே, எச்சரிக்கையின் போது இவ்வுலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படப்போகும் பரிதாபத்துக்குரிய ஆன்மாக்களுக்கு தெளிவை அளிக்கும் படியாக கெஞ்சி மன்றாடுகிறேன். அவர்களுடைய பாவங்களை மன்னியும். உம் திருப்பாடுகளின் நினைவுகளின் வழியாக பாவங்களுக்குப் பரிகாரமாக இந்த விசேஷித்த பலனை அருளுமாறு கெஞ்சிக் கேட்கிறேன். உமக்கு என் மனம், சரீரம் மற்றும் ஆன்மாவை இந்த

ஆன்மாக்களை இரட்சித்து நித்திய வாழ்வுக்கு அழைத்துச் சேர்க்கும்படிக்கு பரிகாரப்பலியாக செலுத்துகிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 66- மறைபரப்பு பணியாளர்கள் உம் வல்லமையுள்ள பரிசுத்த திருவார்த்தைக்கு உண்மையாய் நிலைத்திருக்க உதவி கோரி செபம்.**

ஓ அன்பு இயேசுவே, உம் பெரிதான திருவாத்தைக்கு உண்மையாய் என்றென்றும் நிலைத்திருக்க உதவி புரியும். இக்கட்டான இவ்வேளையில் திருச்சபையின் உண்மைகளை நான் பற்றிக் கொண்டு வாழ எனக்கு உதவி புரியும். உமது தேவதிரவிய அனுமானங்களை நீர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்தது போல நான் வழங்க, என்னை உம் கிருபையினால் நிரப்பும். என் ஊழியம் தடை பண்ணப்பட்டால் கூட, உம் திருச்சபைக்கு வாழ்வின் அப்பத்தை வழங்கவும், உமக்கு உண்மையோடு இருக்கவும் எனக்கு உதவி புரியும் தேவனின் மெய்யான வார்த்தைகளை அறிக்கையிடவும், நான் சந்திக்க இருக்கும் ஏமாற்றுக்கட்டுகளிலிருந்து என்னை விடுவியும். இவ்வேளையில் உம் விலை மதிக்க முடியாத இரத்தத்தால் உம் பரிசுத்த ஊழியர்களைச் சூழ்ந்துக் கொள்ளும். அதனால் நாங்கள் திடத்தோடும், உண்மையோடும் மற்றும் நேர்நிலையாகவும் எங்கள் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை சார்ந்திருக்கச் செய்யும். ஆமென்.

என் அன்பிற்குரிய பரிசுத்த ஊழியர்களே, உங்கள் இருதயத்தைத் தளரவிட வேண்டாம். ஏனெனில் ஆத்துமாக்களை சேகரிக்கும் கடைசப் போரில் ஆத்தும இழப்பு நேரிடும். என்று முன்கூட்டியே அறிவிக்கப்பட்டுள்ளது. நான் உங்களை நேசிக்கிறேன். நீங்கள் நடந்து செல்லும் முட்கள் நிறைந்த கல்வாரி பாதையில் நானும் உங்களுடன் நடந்து வருவேன். அதனால் இரட்சிப்பை மீண்டும் ஒருமுறை அனைத்து ஆன்மாக்களும் பெற்றுக் கொள்வார்கள் - உங்கள் அன்பு இயேசு.

**சிலுவைப் போர் செபம் : 67 – பொய்களின் ராஜாவிடமிருந்து என் குழந்தைகளை பாதுகாக்க வேண்டிச் செபம்**

அன்பான இயேசுவே, என் குழந்தைகளை பொய்களின் ராஜாவிடமிருந்து பாதுகாக்க வேண்டுமென்று கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன். இக்குழந்தைகளை (பெயர் சொல்லவும்) உம் விலை மதிக்க முடியாத இரத்தத்தின் சால்வையின் வழியாக உம் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்கிறேன். நீர் அவர்கள் ஆன்மாக்களை ஒளிர்வடையச் செய்து உம் அன்பு கரங்களுக்குள் சேர்ந்துக் கொள்ளும். அதனால் அவர்கள் எல்லா வேதனைகளுக்கும் விலக்கப்பட்டு இருப்பார்களாக நீர் அவர்களின் ஒவ்வொரு பலவீனங்களும் சுத்திகரிக்கப்படுவதாக. மனசாட்சியின் ஒளிர்வடைதல் வேளையில் அவர்கள் பாவங்கள் கழுவபடும்படியாக அவர்கள் இருதயத்தை திறந்து

உம் பரிசுத்த ஆவியனால் அவர்கள் ஆன்மாவை நிரப்பும்படியாக வேண்டிக் கொள்கிறேன்.

**சிலுவைப் போர் செபம் : 68 – சாத்தானின் பதிப்பிற்கு என்னைக் காக்க வேண்டிச் செபம்**

ஓ தேவனின் மாதாவே, இரட்சண்யத்தின் மாதாவே, உம் பெரிதான புனித முக்காட்டினால் என்னையும், என் குடும்பத்தினரையும் மூடி, சாத்தான் மற்றும் அவர்ன தூதர்களின் பதிப்பினின்று எங்களை பாதுகாத்தருளும் எந்நேரங்களிலும் உம் அன்பு மகன் இயேசுகிறிஸ்துவின் தேவ இரக்கத்தின் பேரில் நம்பிக்கை வைக்க எனக்கு உதவி புரியும். இயேசுவின் மேல் நான் வைத்திருக்கும் அன்பை நிலை நிறுத்தவும், எவ்வளவாய் சோதனைகள் என் முன் வைக்கப்பட்டாலும் அவருடைய போதனைகளின் உண்மைகளிலிருந்து நான் பிரிந்து விடாமலும் இருக்க உதவும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 69 – தேவனின் திருச்சித்தத்தைப் பெற்றுக் கொள்ள பிதாவாகிய சர்வேசுரனிடம் செபம்**

அதி உன்னத பிதாவாக தேவனே உம் திருச்சித்தத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். உம் மக்கள் அதை ஏற்றுக் கொள்ள உதவும் உமது பிள்ளைகளின் புத்திர சுவீகாரமாகிய பிதாவின் ஆசீர்வாதங்களை சாத்தான் தடை செய்வதை நிறுத்தி விடும். உம் பரதேச ஆசீர்வாதங்களின் உரிமைக்காக நாங்கள் போராடுவதை நிறுத்த விடாதேயும். சாத்தானையும், அவனுடைய சேர்ந்து விழுந்த தூதர்களையும் ஒழிப்பதற்காக நாங்கள் வேண்டிக் கொள்ளும் வரங்களை அளித்தருளும். அன்பு பிதாவே, உம் இரக்கத்தினால் இவ்வுலகை சுததிகரித்து, உம் பரிசுத்த ஆவியினால் எங்களைச் சூழ்ந்து கொள்ளும்படி கேட்கிறோம். மிருகத்தை ஒழிப்பதற்காக உம் பெரிதான பரிசுத்த சேனையை நாங்கள் ஒன்று சேர்க்க எங்களை வழி நடத்தும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 70 – மறைபரப்பு பணியாளர்கள் தேவனுடைய புனித வார்த்தைகளுக்கு திடமாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டிச் செபம்**

ஓ அன்பு இயேசுவே, உம் திருச்சபையின் பிளவு வெளிப்படும்போது உம் பரிசுத்த ஊழியர்கள் அதைப் புரிந்து கொள்ள உதவும். உம் பரிசுத்த ஊழியர்கள் உம் புனித வார்த்தைகளை பேணிக்காப்பதில் திடமாகவும், உண்மையாகவும் இருக்க உதவும். உலகப் பிரகாரமான இலட்சியங்கள் அவர்கள் உம்மேல் வைத்துள்ள தூய்மையான அன்பை மறைத்து விடாமல் பார்த்துக் கொள்ளும். அவர்கள் உம் முன் தூய்மையோடும், தாழ்ச்சியோடும் இருக்கும் வரத்தையும், உம் அதி உன்னத பிரசன்னம் திவ்விய நற்கருணையில் இருப்பதைக் கண்டு உணர்ந்து

ஆராதிக்கவும் அவர்களுக்கு உதவும். உம் தூய ஊழியர்கள் உம்மேல் கொண்டுள்ள வெதுவெதுப்பான அன்பு மாறி அவர்கள் ஆன்மா பரிசுத்த ஆவியானவரின் அக்கினியினால் மீண்டும் பற்றியெரிய அவர்களை வழி நடத்தும். அவர்களைத் திசைத்திருப்ப வைக்கப்படுகிற சோதனைகளை கண்டுணர அவர்களுக்கு உதவும். எந்நேரமும் உண்மையை காண அவர்கள் கண்களைத் திறந்தருளும். அன்பு இயேசுவே, அவர்கள் ஆசிர்வதித்து, உம் விலை மதிக்க முடியாத இரத்தித்தினால் சூழ்ந்து தீமைகளிலிருந்து பாதுகாத்தருளும் சாத்தான் கொண்டு வரும் மயக்கத்தை எதிர்த்து நிற்கவும், எதுவும் பாவம் இல்லை என்று நினைக்கும் சூழ்ச்சியில் விழுந்து விடாதபடி அவர்களுக்குத் திடத்தை அருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 71 வாதைகளிலிருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டிச் செபம்**

ஓ இயேசுவே, தேவனின் மக்களை, அந்திகிறிஸ்துவிடமிருந்து பாதுகாத்தருளும். இவ்வுலகை கட்டுப்படுத்தச் செய்யப்படும் திட்டங்களிலிருந்து எங்களை காப்பாற்றும். தேவனே வாதைகளிலிருந்து எங்களைப் பாதுகாத்தருளும். இருளான ஆன்மாக்களை அந்தி கிறிஸ்துவிடமிருந்து காப்பாற்றி அதனால் அவர்களும் உம் கண்களுக்கு முன்பாக இரட்சிக்கப்பட உதவி செய்யும். எங்கள் பலவீனத்தில் எங்களுக்கு உதவும். ஆவியில் எங்களைப் பலப்படுத்தி, நாங்கள் ஒருவரையொருவர் வழி நடத்தி, உம் சேனையின் முன் நடந்து பரதேசத்தின் வாயிலுக்குள் வர உதவி புரியும். அன்பு இயேசுவே எனக்கு நீர் தேவை. அன்பு இயேசுவே நான் உம்மை அன்பு செய்கிறேன். இவ்வுலகில் உள்ள உம்பிரசன்னத்தை நான் மகிமைப்படுத்துகிறேன். நான் இருளை தவிர்ப்பேனாக நான் உம்மை ஆராதிக்கிறேன். மற்றும் என் ஆவியையும், சரீரத்தையும் உமக்குக் காணிக்கையாக்குகிறேன். அதனால் உம் பிரசன்னத்தின் உண்மையை நீர் எனக்கு வெளிப்படுத்தவும் மற்றும் என்றென்றும் உம் இரக்கத்தையே நம்பி இருக்கும்படி செய்யும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 72 – ஒரு சீஷனின் செபம்**

அன்பு இயேசுவே, நான் உமது திருவார்த்தைகளை இவ்வுலகில் பரப்ப தயாராக உள்ளேன். திடத்தையும், பலத்தையும் மற்றும் ஞானத்தையும் தாரும். அதை பிறருக்கு கொடுக்கவும், அதனால் என்னாவியன்ற ஆன்மாக்களை உம்மிடம் கொண்டு வர எனக்கு வரம் தாரும். என்னை உம் திரு இருதயத்துக்குள் கொண்டு வரவும், உம் விலை மதிக்க முடியாத இரத்தத்தினால் என்னைச் சூழ்ந்து கொள்ளும். அதனால் இவ்வுலகின் அனைத்து பகுதிகளில் உள்ள அனைத்து விசுவாசத்தை உடைய உம் அனைத்து மக்களுக்கும், அவர்கள் இரட்சிப்பிற்கு

தேவையான மனமாற்றைப் பரப்ப எனக்கு அருள் தாரும். நான் எப்பொழுதும் உம்மையே நம்பியிருக்கும் உம் அன்பார்ந்த சீஷன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 73 - இளம் ஆன்மாக்கள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கான செபம்**

ஓ இயேசுவே இவ்வுலகில் உள்ள எல்லா இளைஞர், சிறுவர் ஆன்மாக்களைக் காப்பாற்ற எனக்கு உதவி செய்யும். உமது கிருபையினால் உம் பிரசன்னத்தின் உண்மையை அவர்கள் காணச் செய்தருளும். உமது திரு இருதயத்திற்குள் அவர்களை கொணர்ந்து, உம் அன்பையும், இரக்கத்தையும் அவர்கள் காணச் செய்தருளும். என் செபத்தின் வழியாக அவர்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றி, அவர்களுடைய ஆன்மாக்கள் மீது இரக்கமாயிருக்க வேண்டுகிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 74 – பகுத்தறிவு வரம் கிடைக்க வேண்டிச் செபம்**

ஓ தேவனின் மாதவே, என் ஆன்மாவில் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ள தகுதியுள்ளவளாக எனக்கு உதவும் பரிசுத்த ஆவியின் சக்தியின் வழியாக என்னை ஒரு குழந்தையை போல உம் கரங்களில் ஏந்தி, பகுத்தறிவு வரம் கிடைக்கும் பாதையில் என்னை வழிநடத்தியருளுமாறு வேண்டிக் கொள்கிறேன். என் இருதயத்தைத் திறந்து என் சரீரம், மனம் மற்றும் ஆவியில் சரணடைய எனக்குப் போதித்தருளும். பெருமையின் பாவத்தை நான் தவிர்த்து, என் பழைய பாவங்கள் மன்னிக்கப் பட வேண்டிச் செபிக்கவும் அதனால் என் ஆன்மா சுத்திகரிக்கப்படச் செய்யும் நான் முழுமையாக்கப்படவும் அதனால் பரிசுத்த ஆவியின் வரங்களை நான் பெற்றுக் கொள்ளவும் உதவி செய்யும் இரட்சண்யத்தின் மாதவே, உம்முடைய பரிந்துறைப்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் அகமகிழ்ச்சியுடனும், அன்புடனும் இவ்வரங்களை என் இருதயத்தில் பெற்றுக் கொள்ள காத்திருக்கின்றேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 75 – என் அன்பு இயேசுவுக்கு என் வேதனைகளை பரிசாக அளிக்கும் செபம்**

இயேசுவே, நீ கல்வாரியில் அடைந்த அளவில்லதத வேதனைகளோடு இணைந்து என் வலிகளையும், வேதனைகளையும் சமா்ப்பிக்கின்றேன். வசப்பு வார்த்தைகள் பலவிதமான வேதனைகளால் கஷ்டபடுவதை நீா் முள்முடி சூட்டப்படுத்தின் மகிமைக்காக ஏற்றுக் கொண்டு சமா்ப்பிக்கின்றேன். என்னை பிறா் தவறாக நடத்துவதையெல்லாம் பிலாத்தின் முன் நீா் தாழ்த்தப்பட்டதின் மகிமைக்காக ஒப்புக் கொடுக்கின்றேன். நீா் கற்றூணில் அடிக்கப்பட்டதின் மகிமையாக பிறரால் நான் சரீரத்தில் வதைக்கப்படுவதை சமா்ப்பிக்கிறேன். நீா் முள்

முடியினால் சூட்டப்பட்டபோது உம் கண்ணினை கிழிந்த உம் வேதனைக்கு மகிமைக்காக நான் என் எல்லா அவமானங்களை ஏற்றுக் கொண்டு அதை உமற்கே சமர்ப்பிக்கின்றேன்.

உம்மை பின்பற்றி நடக்கும் போது உம் போதனைகளை எனக்கு தாரும். உம் பெயரால் நான் நித்திக்க படும் போது கல்லாரியின் பாதையில் உமக்கு நான் உதவியாக இருப்பேனாக. பெருமையினின்று என்னை காப்பாற்றும். உம்மை நேசிப்பதை பயமின்றி ஒப்புக் கொள்ள எனக்கு உதவி புரியும்.

அன்பு இயேசுவே என் வாழ்வில் எல்லாம் நம்பிக்கையற்று போகையில், நீர் உம்மை பரிபூரண சித்தத்தோடு, மிகவும் கொடூரமான சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்ததை நினைவு கூற உதவி புரியும். நீர் எனக்காக தந்த பலியின் நினைவாக நான் உண்மையுள்ள போராளியாக உண்மை கிறிஸ்தவனாக(ளாக), தாழ்ச்சியுடனும் சுத்த இதயத்துடனும் எழுந்து நிற்க உதவி புரியும். இயேசுவே என் கரத்தை பிடித்து என் வேதனை சமர்ப்பிக்கும்போது பிறரை உம் நேசிக்கும் போது, உம் ஏக சிந்தனையுள்ள சேனையில் சேர பிறரை ஊக்குவிக்கும் என்பதை எனக்கு காண்பியும். கொடுமையானவனின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிரான கடைசி போரில் ஆன்மாக்களை காப்பாற்ற என் வேதனைகளை உமக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுக்க உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 76 – ஒரு நாத்திகர் மனம் திரும்ப செபம்**

இயேசுவே, எனக்கு காட்டப்படும் தேவனின் அன்பைப் பெற்றுக் கொள்ள எனக்கு உதவும். நான் காப்பாற்றப்படும்படியாக என் கண்கள், மனம், இருதயம் மற்றும் ஆன்மாவைத் திறந்தருளும். என் இருதயத்தை உம் அன்பினால் நிரப்பி உம்மேல் நான் நம்பிக்கை வைக்க எனக்கு உதவும். இறுதியாக சந்தேகத்தின் கொடுமைகளிலிருந்து என்னைக் காப்பாற்றி, நிலைப்படுத்தியருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 77 – பிரிட்டன் நாட்டிற்காக செபம்**

ஓ அதி உன்னத பிதாவே, மனுக்குலத்தை உருவாக்கிய தேவனே, என் செபங்களைக் கேட்டருளும், பிரிட்டனைப் பற்றிக் கொண்டிருக்கும் தீமையிலிருந்தும், சர்வாதிகாரத்திலிருந்தும் காப்பாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன். உமது கண்களுக்கு முன்பாக அனைத்து வேதங்களையும், விசுவாசங்களையும், பலதரப்பட்ட மக்களையும் ஒன்றினைக்க உம்மைக் கேட்கிறேன். உம் போதனைகளை ஒதுக்கி வைக்கும் அனைத்துச் சட்டங்களையும் எதிர்க்க எங்களுக்கு பலன் தாரும். உம்மை விட்டு ஒரு போதும் விலகாத பலத்தையும், திடத்தையும் எங்களுக்குத் தந்து உம் மக்களை எங்களது செபங்களினால் காப்பாற்ற எங்களுக்கு உதவும். எங்கள் சகோதர, சகோதரிகளை ஒருங்கிணையும்.

உம்முடைய நித்திய வாழ்வின் வாக்குத்தத்திற்கு வணக்கம் செலுத்தி உமது பரதேசத்தின் வாயிலில் கூட்டிச் சேரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 78 –தீமையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டிச் செபம்**

ஓ இயேசுவே சாத்தானின் சக்தியிலிருந்து என்னைப் பாதுகாத்தருளும். நான் சாத்தானின் சார்பை விட்டும், அவனது பொல்லாத வழிகளையும் விட்டும் விலகும் போது என்னை உம் திரு இருதயத்திற்குள் வாரிக் கொள்ளும். நான் முழந்தாளபடியிட்டு நேர்மையான இருதயத்துடனும் தாழ்ச்சியுடனும் என் சித்தத்தை உமக்கே வழங்க அருள தாரும். நான் உம் திரக்கரங்களுக்குள் என் வாழ்வை அர்ப்பணிக்கின்றேன். தீமைகளிலிருந்து என்னை பாதுகாத்தருளும். என்னைத் தீமையிலிருந்து விடுவித்து என்னை உம் பாதுகாப்பு அரணுக்குள் இன்றும், என்றும், என்றென்றம் நிலைத்திருக்கச் செய்யும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 79 – (என் பிரியமான அன்பு மகளே என் இரக்கத்தின் கரங்களை மறுக்கும் 200 கோடி மக்களின் ஆன்மாக்களை இரட்சிக்கும் சேவைக்காக இந்த செபத்தை தேவனின் சிலுவைப் போராளிகள் செபிக்கக் கேட்கிறேன்)**

ஆன்மாக்களைத் தொலைத்துள்ள 200 கோடி மக்களின் இரட்சிப்பிற்காக வேண்டிச் செபம்

ஓ அன்பு இயேசுவே, உமது இரக்கத்தை, காணாமல் போன ஆன்மாகக்ள் மீது ஊற்றியளுமாறு வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் உம்மை நிராகரிப்பதை மன்னித்து, என் செபங்களையும் வேதனைகளையும் ஏற்றுக் கொண்டு உமது இரக்கத்தின் வழியாக அவர்கள் ஆன்மாக்களை சுத்திகரிக்கும் கிருபையை அருளுமாறு வேண்டுகிறேன். அவர்கள் ஆன்மாவில் தெளிவை அளித்தருளும் அவர்கள் இருதயத்தைத் திறந்தருளும். அதனால் அவர்கள் உம்மிடம் வந்து, பரிசுத்த ஆவியின் வரத்தனால் நிறைவடையும் அருளைக் கேட்கவும் உதவி செய்யும் உமது அன்பின் உண்மையைப் பெற்றுக் கொண்டு உம்மோடும், தேவனின் திருக்குடும்பத்தோடும் அவர்கள் சேர்ந்து என்றென்றும் வாழ வரம் அளித்தருளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 80 – உயிர்க் கொலை செய்த ஆன்மாக்கள் மனம் மாற வேண்டிச் செபம்.**

ஓ அன்பு இயேசுவே, உயிர்கொலை செய்தவர்கள் மீது உமது இரக்கத்தை கெஞ்சிக் கேட்கிறோம். சாவான பாவத்தில் இருக்கும் அவர்களுக்கு உம் சுத்தமாக்குதலை அவசரமாய் கேட்கிறோம். நான் என்னுடைய வேதனைகளையும்,

கஷ்டங்களையும் உமக்குத் கையளிக்கிறேன். அதனால் உம் திரு இருதயத்தை திறந்து அவர்களது பாவங்களை மன்னியும். தங்கள் ஆன்மாவில் தீமையான நோக்கத்தை உடையவர்களை உம் விலை மதிக்க முடியாத இரத்தத்தினால் சூழ்ந்து அவர்களது பலவீனங்களை அகற்றி சுத்தப்படுத்தியருளுமாறு கேட்டுக் கொள்கிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 81 – பரிசுத்த நற்கருணை என்னும் சற்பிரசாத நன்கொடைக்கான செபம்.**

ஓ விண்ணுலக நற்கருணையே, என் சரீரத்திற்கு தேவையான போஷிப்பை தாரும். என் ஆன்மாவை இயேசு கிறிஸ்துவின் திவ்ய பிரசனத்தால் நிரப்பும் தேவனின் புனித சித்தம் செய்ய என்ககு தேவையான கிருபையைத் தாரும். உமது தெய்வீக பிரசனத்தால் பிறக்கும் சமாதானம் மற்றும் சாந்தத்தால் என்னை நிரப்பும். உம் பிரசன்னத்தை நான் ஒரு போதும் சந்தேகிக்காதவாறு என்னைக் காத்தருளும். உம்மை என் ஆன்மாவிலும், சரீரத்திலும் ஏற்றுக் கொள்ள உதவி புரியும் உமது பரிசுத்த நற்கருணையினால் எனக்கு அருளப்படும் உம் கிருபை எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை பிரகடனம் பண்ண உதவுமாறு கேட்கிறேன். என் இருதயத்தை சுத்திகரியும். உம் பரிசுத்த நற்கருணை என்னும் நன்கொடையினை நான் உட்கொள்ளும் போது என் ஆன்மாவை சுத்திகரியும். அதனால் தேவனின் சகல மக்களுக்கு கிடைக்கும் கிருபையையும் சகல ஆசீர்வாதங்களையும் நரக நெருப்பினின்று விடுதலையும் எனக்கும் அருளுமாறு மன்றாடுகின்றேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 82 – எஞ்சியுள்ள உம் திருச்சபை வெற்றி பெற வேண்டி செபம்**

இவ்வுலகின் ராஜாவும் இரட்சகருமான இயேசுவே, உம் மகத்துவத்தை எல்லோரிடமும் பிரகடனம் செய்வதற்காக எங்கள் சங்கீகரித்திருந்தலையும், எங்கள் விசுவாசத்தையும் மற்றும் எங்கள் செயல்களையும் நாங்கள் உமக்கே அர்ப்பபணித்து உறுதி அளிக்கின்றோம். பெலன் பெற்று உறுதியுடன் உம் சத்தியத்தை எந்நேரமும் பிரஸ்தாபிக்க எமக்கு உதவி புரியும். வெற்றியை நோக்கி நடக்கையிலும் ஆன்மாக்களை இரட்சிக்கும் திட்டத்திலும், தாமதிக்கவும், தவறவும் விடாதேயும். எங்கள் இருதயம், எங்கள் உடமை அனைத்யையும் உமக்கே கையளிக்க உறுதி அளிக்கின்றோம். அதனால் புதிய பரதேசத்தின் வாசல்களை நோக்கி செல்லும் முள்ளான பாதையில் வரும் தடைகளை நீக்கி விடும். எங்கள் பிரியமுள்ள இரட்சகரும் எங்களைக் காப்பவருமான எங்கள் அன்புமிகு இயேசுவே உம்மை நாங்கள் அன்பு செய்கிறோம். உம் திரு இருதயத்திற்குள் எங்கள் சரீரம், மனம் மற்றும் ஆவியினை ஒருமிக்க கையளிக்கின்றேன். உம் பாதுகாப்பின்

கிருபையை எம்மேல் பொழிந்தருளும். உம் விலை மதிக்க முடியாத இரத்தத்தால் சூழ்ந்து அதனால் நாங்கள் உம் புதிய ராஜ்யத்தின் சத்தியத்தை எழுந்து நின்று பிரகடனம் செய்ய தேவையான தைரியத்தையும் அன்பையும் நிரப்பும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 83 – தேவ கோபாக்கினையால் வரும் சுத்திகரிப்பினை மாற்றக் கேட்டு செபம்**

ஓ சர்வ வல்லமையுள்ள தேவனாகிய எங்கள் அன்பு பிதாவே, உம் பிள்ளைகளாகிய நாங்கள் பரலோகத்தில் இருக்கும் உம் மகத்துவமான சிம்மாசினத்திற்கு முன்னால் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரிக்கின்றோம். இவ்வுலகியுள்ள தீமையை நீக்குமாறு கெஞ்சி மன்றாடுகிறோம். இவ்வுலகில் உம் பிள்ளைகள் மீது கஷ்டங்களை உருவாக்கும் ஆன்மாக்கள் மீது உம் இரக்கத்தை மொழிந்தருளுமாறு மன்றாடுகிறோம். தயவு கூர்ந்து அவர்களை மன்னியும். அந்தி கிறிஸ்து தன்னை வெளிபடுத்திய உடனே அவனை நீக்கி விடும். உமது கோபாக்கினையினால் வரும் சுத்திகரிப்பின் செயல்களை மாற்றிவிடும். மாறாக எங்கள் செபங்களை மற்றும் எங்கள் பாடுகளை ஏற்று, உம் பிள்ளைகளின் துன்பங்களை எந்நேரமும் குறைத்துவிடும்படியாக கெஞ்சி மன்றாடுகின்றேன். உம்மேல் நம்பிக்கை வைக்கிறோம். உம்மை மகிமை படுத்துகிறோம். உம் திருமகனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி எங்களை பாவத்தினின்று இரட்சித்ததற்கான உமது தியாகத்திற்காய் நன்றி. உமது திருக்குமாரனை மனுகுலத்தின் இரட்சகராக மீண்டும் வரவேற்போம். எங்களை தயவு கூர்ந்து பாதுகாத்தருளும். தீமையினின்று எங்களை விலக்கி விடும். எங்களை குடும்பதாருக்கு உதவி புரியும். எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 84 - இவ்வுலக ஆளும் வலிமையானவர்களின் ஆன்மாக்கள் ஒளிர்வடைய செபம்**

ஓ அன்பு இயேசுவே இவ்வுலகை ஆளும் வலிமையானவர்களின் ஆன்மாக்கள் ஒரிவடையும்படி உம்மை நான் கெஞ்சி மான்றாடுகிறேன். உம் இரக்கத்தின் சான்றை அவர்களுக்கு காண்பியும். சிலுவை மரத்தில் எங்கள் பாவங்களுக்காக மரித்த உம் மிகவும் மகத்துவமுள்ள தியாகத்தின் மகிமையால் அவர்கள் இருதயங்கள் திறந்து உண்மையான மனித சிநேகம் பெறம் உதவி புரியும். பகுத்தறிதலினால் யார் தங்கள் மெய்யான கர்த்தரென்றும், யார் தங்களை படைத்தவரென்றும் அறிய உதவி புரியும். உண்மையினை உணர வேண்டிய கிருபையினால் அவர்களை நிரப்பும். கோடான கோடி மக்கள் தடுப்பூசி, உண்வு பற்றாக்குறை, மாசற்ற பிள்ளைகளை கட்டமாய் தத்து செய்தல் மற்றும் குடும்பங்களின் பிரித்தல் போன்ற அவர்களின் பொல்லாத திட்டங்களை தயவு கூர்ந்து தடுத்து விடும். அவர்களை குணமாக்கும். உம் ஒளியினால் அவர்களை சூழ்ந்து உம் இருதயத்தின்

அகத்துக்குள் அவர்களை எடுத்து தீயவனின் பயங்கரங்களினின்று அவர்களை இரட்சியும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 85 – அமெரிக்காவை சூழ்ச்சிக்காரனின் கரத்தினின்று இரட்சிக்கக் கோரி செபம்

ஓ எங்கள் இயேசுவே உம் மிகவும் விலையேறப்பட்ட பாதுகாப்பால் எங்கள் நாட்டை சூழ்ந்து கொள்ளம், தேவ கட்டளைகளுக்கு விரோதமாக நாங்கள் செய்த பாலங்களை மன்னியும். அமெரிக்காவின் மக்கள் மீண்டும் தேவனிடம் வந்து விட உதவி புரியும் ஆண்டவரின் சத்திய பாதைக்கு வர அவர்கள் மனத்தை திறந்துவிடும். அவர்களது கடின இருதயத்தை திறந்து விடும். அதனால் அவர்கள் உம் இரக்கத்தின் கரங்களை வரவேற்பார்களாக. உம் பிரசனத்தை மறுக்க எங்களை வற்புறுத்துதல் செய்வதினால் வரவிருக்கும் தேவதூஷணத்தை எதிர்த்து இத்தேசம் நிற்க உதவி புரியும். இயேசுவே நீர் எங்களை இரட்சித்து தீமையினின்று காத்தருளுமாறு இறைந்து மன்றாடுகிறோம். உம் பரிசுத்த திருஇருதயத்திற்குள் உம் மக்களாகிய எங்களை அரவணைத்துக் கொள்ளும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 86 – சந்தேகம் என்னும் கொடுமையினின்று என்னை விடுவிக்க செபம்

அன்பு இயேசுவே. உம் அறிவிப்புகளில் நீர் வெளிபடுத்தும் உண்மையினால் நான் உம்முன் குழப்பமுற்றும், தெளிவற்றும் கலக்கமுற்றும் வருகிறேன். உம்மை நான் தவறாக எண்ணியிருந்தால் என்னை மன்னியும். உம் சத்தத்தை கேட்காததினால் என்னை மன்னியும். நீர் எனக்கு காண்பிப்பதை அறியும்படி என் கண்களை திறந்தருளும். பரிசுத்த ஆவியின் வல்லமையினை எனக்கு தந்து உண்மையினை நான் அறியும்படி உம்மை மன்றாடுகிறேன். இயேசுவே உம்மை நான் அன்பு செய்கிறேன். சந்தேக கொடுமையினின்று என்னை விடுவிக்கும்படியாக கெஞ்சுகிறேன். உம் குரலுக்கு செவி கொடுக்க எனக்கு உதவி புரியும். உம்மை நான் வேதனை படுத்தியிருந்தால் என்னை மன்னியும். என்னை உம் திரு இருதயத்திற்கு அருகில் கொண்டுச் சேரும். உம் புதிய ராஜ்யத்திற்குள் வழி நடத்தும். என் செபங்களினாலும் வேதனைகளாலும் உம் திருஇருதயத்திற்கு மிகவும் விலையேற பெற்ற ஆன்மாக்களை இரட்சிக்க நான் உதவி புரிய தேவையான ஆசீர்வாதங்களை எனக்கு தாரும். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 87 – எங்கள் தேசத்தை தீமையினின்று பாதுகாக்க வேண்டிச் செபம்

ஓ பிதாவே உம் திருமகனின் வழியாக கம்யூனிசத்தினின்று எங்களைக் காப்பாற்றும் கடுங்கோலாட்சியினின்று எங்களைக் காப்பாற்றும். எங்கள் நாட்டை

பொய் மதங்களினின்று பாதுகாத்தருளும். உம் பிள்ளைகளை தீமையினின்று இரட்சியும். தேவனின் மெய் ஒளியை நாங்கள் காண உதவி புரியும். உம் திருமகனின் போதனைகளுக்கு எங்கள் இருதயத்தை திறக்க உதவி புரியும். எல்லா திருச்சபைகளும் தேவனின் வார்த்தைகளுக்குள் உண்மையாய் நிலைத்திருக்க உதவி புரியும். எங்கள் நாடுகளுக்கு வரும் வேதனையினின்று காப்பாற்றுமாறு கெஞ்சி கேட்கிறோம். நாங்கள் எவ்வளவாய் உம்மைத் துன்புறுத்திய போதும் கூட அன்பு ஆண்டவரே இரக்க கண்களால் எம்மை நோக்கியருளும், இயேசுவே மனித குமாரனே. உம் விலைமதிக்கப்படாத இரத்தத்தால் எங்களை சூழ்ந்து கொள்ளும். பொல்லாங்கானவனின் பயங்கரங்களினின்று எங்களை இரட்சியும். இக்கால கட்டத்தில் தீமை இவ்வுலகைச் சூழ்ந்து கொள்ளாதபடி உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 88 – எச்சரிப்பு வேளைக்கு பின் ஆன்மாக்களுக்கான செபம்

ஓ இயேசுவின் பரிசுத்த திரு இருதயமே, பரிதாபத்துக்குரிய பாவிகளான எங்கள் அனைவர் மீதும் இரக்கமாயிரும். வழிநடத்துதலுக்காக பரிதபித்து அலைந்து தேடும் கல்லாயிருந்த இருதயத்தோரை ஒளிர்வடைய செய்யும். எங்கள் பலவீனங்களை மன்னியும். உமது அன்பு மற்றும் இரக்கத்தின் வழியாக உமது பெரிதான இரட்சிப்பின் கிருபையை அவர்கள் இருதயம் பற்றிக் கொள்ள உதவி புரியும். தேவனின் சத்தியத்தை நிராகரிக்கும் ஆன்மாக்களை மன்னிக்குமாறு மன்றாடுகிறேன். உம் ஒளியால் அவர்களை சூழ்ந்துக் கொள்ளும். அதனால் அன்பு இயேசுவே, சாத்தானின் சூழ்ச்சிகளாலும் பயங்கரத்தினினாலும் உம்மிடமிருந்து உம் பிள்ளைகளை நித்தியதிற்கும் பிரித்துவிடாதபடி செய்யும். எல்லா தேவபிள்ளைகளும் உம் பெரியதான இரக்கத்திற்கு நன்றி சொல்ல தேவையான பெலத்தைத் தருமாறு இவ்வுலகில் அலையும் தொலைந்து போன ஆன்மாக்களுக்கு உம் ராஜ்யத்தின் கதவுகளை திறக்குமாறு கெஞ்சி மன்றாடுகிறேன். ஆமென்.

## சிலுவைப் போர் செபம் : 89 – பரிதாபத்துக்குரிய பாவிகளுக்கான செபம்

இயேசுவே பரிதாபத்துக்குரிய பாவியாகிய நான், என் ஆன்மாவில் மனஸ்தாபத்தோடு உம்மிடம் வரும்படி எனக்கு உதவி புரியும். என் வாழ்வை சீர்கேடு செய்த பாவங்களிருந்து என்னை சுத்திகரியும். பாவங்களினால் எனக்கு மறுக்கப்பட்ட விடுதலையினையும் மற்று என் பாவங்களை முற்றிலுமாய் நீக்கி ஓர் புதிய வாழ்வினை எனக்கு பரிசாக தாரும். உம் இரக்கத்தின் ஒளியால் என்னை புதிப்பியும். உம் இருதயத்துக்குள் என்னை அரவணையும். உம் அன்பை நான் உணர செய்யும் அதனால் நான் உம்மண்டை வரும்படிக்கு உம்மேல் எனக்கு உள்ள அன்பை மூட்டிவிடும். இயேசுவே என்மீது இரக்கமாயிரும். என்னில் பாவம்

அற்று போக செய்யும். புதிய பரதேசத்துக்குள் நான் நுழைய என்னை தகுதியுள்ளவராக்கும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம்: 90 – உமது மிகவும் மகத்துவமுள்ள இரண்டாம் வருகைக்காக நன்றியறிதல் செபம்.**

ஓ என் இயேசுவே உம் மிகவும் மகத்துவமுள்ள இரண்டாம் வருகைக்காக என் போற்றதலையும், நன்றியுரைத்தலையும் அர்ப்பணிக்கின்றேன். என்னைப் பாவத்தினின்று மீட்டு எனக்கு நித்திய வாழ்வை அளிப்பதற்காகவே என் இரட்சகரே நீர் பிறந்தீர் என் அன்பையும், நன்றியினையும் மற்றும் ஆராதனையும் உமது மகத்துவமான வருகைக்கு தயார் செய்யும் இவ்வேளையில் உமக்கே என்னை அர்ப்பணிக்கின்றேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் :91 – என் விசுவாசத்திற்கு உண்மையாய் இருக்க செபம்**

ஓ வணக்கத்துக்குரிய இரட்சணியத்தின் மாதாவே, தீமை என்னோடு போராடும் வேளையான என் தேவைத்தருணத்தில் என்னை பாதுகாத்தருளும். தேவனுடைய திருவசனத்திற்காய் போராட எனக்கு தேவையான பெலன் மற்றும் தைரியத்தை ஆன்மாவிற்கு தந்து எவ்வித பயமுமின்ற எதிர்க்க எனக்கு உதவி புரியும். இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு நான் என்றுமே உண்மையாய் நிலைத்திருக்க நான் என் பயம், கவலை மற்றும் துக்கம் அனைத்தையும் உமக்கே முற்றிலுமாய் கையளிக்கிறேன். தேவக் காரியங்களை செய்ய பொல்லாங்கானவர்கள் முற்றிலுமாய் தடைசெய்தாலும் கூட, தேவனின் பரிசுத்த திருவசனங்களை பிரகடனம் செய் உதவி புரியும். எளிமையான பாதையில் பயமின்றி நடக்கவும் எனக்கு உதவி புரியும். ஓ வணக்கத்துக்குரிய மாதாவே, உம் பரிந்துரையினால் எல்லா கிறிஸ்தவர்களும் உபத்திரவத்தின் எல்லா வேளையிலும் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டிக் கொள்ளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 92 – நிலைத்திருத்தலின் கிருபைக்கான செபம்**

ஓ அன்பு இயேசுவே, நிலைத்திருத்தல் என்னும் கிருபையை எனக்கு அளிக்குமாறு கேட்கிறேன். உம் மிகவும் பரிசுத்த திருவசனங்களை நான் எடுத்து நிறுத்தத் தேவையான கிருபைகளை எனக்கு தருமாறு கெஞ்சிக் கேட்கிறேன். என்னில் பதுங்கியிருக்கும் சந்தேகங்களை போக்கியருளும். என் ஆன்மாவை இரக்கம், பொறுமை மற்றும் நிலைத்திருத்தலினால் நிரப்பி வழியச் செய்யும். உம் பரிசுத்த நாமத்தால் நான் ஏளனம் செய்யப்படும்போது நிதானத்தோடு நிலைத்திருக்க உதவி புரியும். பெலனின்றி நான் சோர்வுற்ற போது என்னை பெலப்படுத்தி உம் கிருபை ஈந்து தொடர்ந்து மனுக்குலத்தை காக்க நீர் எனக்கு திட்டமிட்ட காரியங்களை செய்ய உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் : 93 – மனமாற்றத்தின் கண்ணீர்களுக்கான செபம்**

ஓ என் நேசத்திற்குரிய இயேசுவே நீர் என் இருதயத்தின் அருகாமையில் இருக்கிறீர். உம்மோடு ஒன்றித்துள்ளேன். நான் உம்மை அன்பு செய்கிறேன். நான் உம்மை அர்ச்சிக்கின்றேன். உம் அன்பை நான் உணர செய்யும். உம் வேதனையினை நான் உணர செய்யும். உம் பிரசனத்தை நான் உணர செய்யும். பரலோகத்தில் போல இவ்வுலகில் உம் ராஜ்யம் வரும்போது அதன் வாழ்விற்கு தகுதி பெற எனக்கு மனத்தாழ்ச்சியினை கிருபையாய் தாரும். மீண்டும் மரித்தோரையும் உயிர்த்தோரையும் நடுதீர்க்க நீர் வரும் முன்னால் ஒவ்வொரு ஆன்மாவையும் நீர் காக்க வகைச் செய்யும் ஊழியத்திற்கு நான் உதவி புரிய என்னையே ஓர் உண்மை ஊழியக் காரணாய் (காரியாய்) உமக்கு கையளிக்கத் தேவையான மனமாற்றத்தின் கண்ணீர்களை எனக்கு தாரும் ஆமென்.

**சிலுவைப் போர் : 94 – மனம் சரீரம் மற்றும் ஆன்மா குணமடைய செபம்**

ஓ அன்பு இயெசுவே, நான் களைப்புற்று வியாதியுற்று வேதனையில் இருக்கும் போது உம் திவ்ய குரல் கேட்க வேண்டும் என்று ஏக்கமுற்று உம்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து கிடக்கின்றேன். உம் தெய்வீக பிரசனம் என்னைத் தொடட்டும். அதனால் உம் தெய்வீத ஒளி, என் மனம், சரீரம், மற்றும் ஆன்மாவுக்குள் சென்று முழ்குவதாக. உம் இரக்கத்தையே நம்பியுள்ளேன். என் வேதனை மற்றும் கஷ்டபடுவதை உமக்கே நான் அர்ப்பணிக்கின்றேன். விசுவாசிக்கும் கிருபையை எனக்குத்தருமாறு கேட்கிறேன். அதனால் வலிமற்றும் இருளிருந்து குணம் பெற்று, சத்திய பாதையை பின்பற்றி உம் புதிய பரதேசத்திற்கும் முற்றிலுமாய் உம்மிடத்தில் கையளிக்க தேவையான கிருபையை தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 95 – செபிக்க நேரம் ஒதுக்க உதவி கேட்டு செபம்**

ஓ இரட்சணையத்தின் மாதாவே, நான் செபம் செய்ய நேரம் இல்லாது தவிக்கும் போது எனக்கு உதவியாக வாரும். உம் நேசகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை அன்பு செய்கிறேன் என்று வெளிபடுத்தி, அதற்கு தகுதியாய் நான் செலுத்த வேண்டிய நேரத்தை சமர்ப்பிக்க உதவி புரியும். என் வணக்கத்துக்குரிய இரட்சணியத்தின் மாதாவே, நான் தேடும் கிருபைகளை எனக்கு தாரும். உம் அன்பு மகனின் பரிசுத்த இருதயத்தின் அகத்திற்குள் என்னை சூழ்ந்து கொள்ளும்படியான கிருபைகளையும் ஆசீர்வாதங்களையும் எனக்கு கேட்டுத் தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 96 – சிலுவைப் போர் செபக்குழு பாதுகாக்கப்படவும் ஆசீர்வதிக்கப்படவும் வேண்டி செபம்**

ஓ என் அன்புமிகு இயேசுவே தயவு கூர்ந்து எங்கள் சிலுவைப் போர் செபக்குழுவினை பாதுகாத்து ஆசீர்வதியும். அதனால் சாத்தானின் பொல்லாத போராட்டத்தினின்று ஆன்மாக்களை இரட்சிக்க வேண்டிய புனித ஊழியத்தில் எங்களை வதைக்கும் தீயவர்களிடமிருந்து கவலையற்ற பாதுகாப்புத்திரை பெற வேண்டுகிறோம். இவ்வுலகில் உம் பரிசுத்த திருநாமத்தைப் பற்றிக் கொண்டு நிலைத்திருக்கும் போது, எந்நேரமும் நாங்கள் உண்மையாகவும் பலத்தோடும் இருக்கவும் மற்றும் உம் பரிசுத்த வார்த்தையை பரப்பும் திருப்பணியில் வரும் போரட்டத்தில், கைவிடாமலும் இருக்க பெலன் தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் 97 – சிலுவைப் போர் செபக்குழுவினர்களை ஒன்று சேர்க்க வேண்டி செபம்**

ஓ அன்புமிகு இரட்சணியத்தின் மாதாவே, உங்கள் செபங்களின் வழியாக உலகெங்குமுள்ள தேவனின் எஞ்சியுள்ள சேனையை ஒன்று கூட்டும்படி மன்றாடுகின்றேன். உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாக எல்லா சிலுவைப் போர் செபக்குழுவினையும இரட்சிப்பின் கிருபையால் சூழ்ந்துக்கொள்ளும். உம் தேவதூதர்களை எங்கள் ஒவ்வொருவருக்கும் அனுப்பும், விசேஷமாக சிலுவை போர் செபக்குழுவை முன்னின்று நடத்தும் குருக்களிடம் அனுப்பும். எங்களுக்குள் விரிசல் உண்டாக்கும் பிரிவினைகளை தடைசெய்து உம் கிருபையின் ஆயுதங்களினால் எங்களைப் பாதுகாத்தருளும். அதனால் வீண் தூண்டுதல்களுக்கு உணர்ச்சி வசப்படாமல் ஆன்மாக்களை காக்க வேண்டுகிறோம். இப்புனித ஊழியத்தை இயேசு கிறிஸ்துவின் மீது நாங்கள் கொண்டுள்ள அன்பால் மேற்கொள்ள உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 98 – உலகத்தலைவர்கள் மீது தேவனின் கிருபை சூழ செபம்**

ஓ வணக்கத்துக்குரிய இரட்சணியத்தின் மாதாவே, உலகை ஆளும் தலைவர்கள் மீது உம் திருமகன் தன் அன்பையும் கிருபையும் பொழிய வேண்டிக் கொள்ளும். தேவனின் ஒளி அவர்கள் மீது பட்டு அவர்களின் ஒளியுற்ற தன்மை குணம்பெறவும் மற்றும் கல்லான அவர்கள் இருதயம் திறக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். மக்கள் மீது அவர்கள் திணிக்கும் வாதைகளை நிறுத்தும்படியாகவும், இயேசு தாமே அவர்களை வழிநடத்தி அவரது போதனைகளின் சத்தியத்தை நாடுகளில் பரவுவதை அவர்கள் தடைசெய்வதை நிறுத்தும்படியாகவும் தயவு கூர்ந்து எங்களுக்காக பரிந்துரை செய்யுங்கள். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 99 – ஆஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து இரட்சிப்படைய வேண்டி செபம்**

சர்வ வல்லமையுள்ள பிதாவே, உம் திருமகனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஆஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து நாட்டிலுள்ள உம் எல்லா பிள்ளைகளுக்கும் உம் இரக்கத்தைத் தாரும். நாங்கள் உம் பரிசுத்த திருவார்த்தைகளை நிராகரித்ததற்காக மன்னியும். வேற்றுமையின் பாவங்களையும் எங்களுக்கு மன்னியும். சுரூப வழிபாட்டு மற்றும் பொய் கலாச்சாரத்தினைப் போக்கியருளும். நம்பிக்கை, விசுவாசம், சகோதர சிநேகம் போன்ற நற்கிருபையினால் எங்களை மூடிவிடும். பகுத்தறிதலின் கிருபையை எங்களுக்கு தருமாறு கெஞ்சி கேட்கிறேன். உம் பரிசுத்த வார்த்தையின் சத்தியத்தை ஊர்ஜிதப்படுத்தும். எங்கள் எல்லோருக்கும் தேவையான ஆசீவாதங்களை ஈந்து எல்லா ஆன்மாக்களுக்கும் நித்திய வாழ்வின் திறவுகோலைத் தரும்படி கெஞ் கேட்கிறோம்.

**சிலுவைப் போர் செபம் : 100- கிறிஸ்துவ வேதம் பிழைத்திருக்க செபம்**

ஓ அன்பு இயேசுவே, உம் கடைசி உண்மை பாப்பரசர் தன் ஊழியத்தை முடிக்கும் இவ்வேளையில், போராட்டங்களை சந்திக்கும் எங்களுக்கு பிழைத்திருக்க வேண்டிய திறமைகளை தாரும். நாங்கள் முன்பே அறிந்திருந்த திருச்சபையில் சீரழிவினால் சந்திக்கயிருக்கும். துன்புறுத்தலை எதிர்கொண்டு நிலைத்திருக்க எங்களுக்கு உதவி புரியும். உம் தெய்வீக வார்த்தையின் சத்தியத்திலிருந்து நாங்கள் சற்றேனும் விலகிவிடாதேயும். நீர் எங்களுக்கு அளித்த உம் தேவ திரவிய அனுமானங்களுக்கும், உமக்கும், புறமுகுதுக் காட்ட எங்களை சோதனைபடுத்தும் போது வஞ்சனையினாலாவது இயலாமையினாலாவது நழுவி விடாதபடி நாங்கள் மௌனமாய் விசுவாசத்தில் நிலைத்திருக்க எங்களுக்கு உதவிபுரியும். எங்களுக்கு தேவையான உம் வல்லமையுள்ள அன்பை உம் சேனைக்கு கேடகமாக மூடி கள்ள தீர்க்கத்தரிசியிடமிருந்து பாதுகாத்தருளும். உம் திருச்சபை உலகில் பரவி அதனால் எங்கள் சகோதர சகோதரிகளை உம் இரண்டாம் வருகைக்கு தயார் செய்ய சத்தியத்தை தழுவி சத்திய பாதையில் செல்ல உதவி புரியும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 101 - இயேசுவின் திவ்விய பிரசன்னத்தை உணருவதற்கான புதுமை ஜெபம்.**

ஓ எங்கள் அன்புமிகு வல்லமையுள்ள பிதாவே, இருப்பதும் இனி வரபோகிறதுமானவகைளை உருவாக்குகிறவரே, உமது நேசக்குமாரனின் பிரசனத்தை இவ்வேளையில் இருக்கும் திருச்சபையில் அறிந்து நாங்கள் பெலன் பெற உதவி புரியும் உமது திருமகனும் எங்கள் இரட்சருமாகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் போது எங்களுக்கு வரும் பயம், தனிமை, மற்றும்

எனக்கு பிரியமானவர்கள் என்னை வெறுக்கும் போது உம் திருமகனாகிய இயேசுகிறிஸ்துவான இரட்சகரை பின்பற்றி மேற்கொள்ள உதவி புரியும்.. எனக்கு பிரியமானவர்கள அவன் பொய்கள் என்னும் வலையில் விழுந்துவிடாதபடி அவர்களை காப்பாற்றும் உமது திருச்சவைபயில், பாழாக்கும் அருவருப்பிணைப் பின்பற்றுவோருக்கு உதவி புரிந்து நரகத்தின் நித்திய நெருப்பிலிருந்து காப்பாற்றுமாறு கெஞ்சி கேட்கிறோம். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 102 - இவ்வுலகிற்கு தேவன் அளித்த செய்திகளை நம்பி விசுவாசத்தை நிலைநிறுத்த செபம்**

அன்புமிகு இயேசுவே, நான் விழும்போது எழுப்பிவிடும்

சந்தேகம் படும்போது ஒளிர்வடைய செய்யும்.

தூக்கத்தில் இருக்கும் போது உமது அன்பினை எனக்கு காட்டும்.

மற்றவர் மீதுகுற்றம் சாட்டும்படியாக எத்தனிக்கும்போது என்னை மௌனமாக்கும்.

மற்றவரை சபையில் தீர்ப்பிடும்போது என் உதடுகளை முத்திரையிடும்

நான் தேவ தூஷணம் செய்யும் வேளையில், உம் நாமத்தால் என்னை இரட்சித்து மீண்டும் உமது அடைக்கலத்துக்குள் என்னை கொண்டு வாரும்.

நான் திடனற்று போகும் வேளையில் நீர் காப்பாற்ற நான் விரும்பும் ஆத்துமாக்களை போராடி மீட்டுக் கொண்டு வர தேவையான ஆயுதங்களைத் தாரும்.

உம் அன்பை எதிர்க்கும்போது முற்றிலுமாய் உம் அன்பு அரவணைப்பில் சரணடைய உதவி புரியும்.

உமது உண்மை பாதையை விட்டு விலகி செல்லும் வேளையில் நான் மீண்டும் உம் பாதையில் வந்தடைய உதவி புரியும்.

உமது திருவார்த்தையினை விசாரிக்கும்போது நான் வேண்டும் பதிலை எனக்கத் தாரும்.

உம்மை சபிப்பவர்களாக இருந்தாலும் கூட அவர்கள் எல்லோரிடமும் பொறுமையுடனும், அன்புடனும் நடதத் உதவி புரியும்.

என்னை துன்புறுத்துவோரை நான் மன்னிக்க உதவி புரிந்து உலகத்தின் இறுதி நாட்கள் வரை உம்மை பின்பற்றும் கிருபையினை எனக்கு தாரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் 103 - இயேசுவோடு அவரது துன்ப கலசத்தில் பங்கு பெறும் வரம் கேட்டு செபம்**

(உபவாசம் இருக்கும் வேளையில் மும்முறை கூறவும்) அன்பு இயேசுவே, எல்லா மக்களின் நலனிற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று சித்தம் வைத்துள்ளீரோ, அதற்கு ஒப்புக்கொடுத்து என்னை உமது திருபாதத்தில் முற்றிலுமாய் அர்ப்பணிக்கின்றேன். உமது பாடுகளின் துன்ப கலசத்தில் நான் பங்கு பெறச் செய்யும். தொலைந்து போன, நம்பிக்கை இல்லா பரிதாபத்திற்குரிய ஆன்மாக்கள் இரட்சிப்படைய இந்த என் துன்பங்களை ஏற்றுக் கொள்ளும். சரீரத்தில் உமது பாடுகளில் நான் பங்கு பெற என்னை அர்ப்பணிக்கின்றேன் ஏற்றுக் கொள்ளும். உம் திருக்கரங்களில் என் இருதயத்தை ஏந்தி என் ஆன்மா உம்மோடு ஒன்றிணைய செய்யும். இப்பாடுகளின் கிருபையின் வழியாக என் ஆன்மா உமது தெய்வீக திருபிரசனத்தினால் சுழந்துவிடும் அதனால் நீர் பாவிகளை மீட்டு தேவ பிள்ளைகள் அனைவரையும் உம்மோடு சதாகாலமும் ஒன்றிணைக்குமாறு வேண்டுகிறேன். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 104 – அடிமைத்தனத்திலிருந்து ஆன்மா விடுதலை பெற செபம்**

அன்பு இயேசுவே, நான் (பெயர் சொல்லும்) ஆன்மாவினை உமக்கு சமர்ப்பிக்கின்றேன். அவர் (அவள்) சாத்தானிடம் தன் ஆன்மாவை தொலைந்து விட்டார். உமது பரிசுத்த கண்களால் அந்த ஆன்மாவை நோக்கி அதை மீட்டுக்கொள்ளும் மிருகத்தின் அடிமைத்தினின்று மீட்டு அந்த ஆன்மாவை நித்திய இரட்சிப்பிற்கு அழைத்துச் செல்லும். ஆமென்.

**சிலுவைப் போர் செபர் : 105 – மற்றவர்கள் மனம்மாறும் கிருபைக்கான செயம்**

என் அன்புமிகு இயேசுவே, உம்மீது எனக்குள்ள அன்பினால் என் ஆன்மாவினை உம்மோடு ஒன்றிணைத்த ஏற்றுக் கொள்ளும் என் ஆன்மாவினை எடுத்து உம் பரிசுத்த ஆவியினால் சூழ்ந்து கொள்ளும் மேலும் இச்செபத்தின் வழியாக நான் சந்திக்கும் ஒவ்வொரு ஆன்மாவையும் உம் இரக்கத்தால் முழுமையாய் சூழ்ந்து உமது ராஜ்யத்திற்குள் நுழைய தேவையான இரட்சணியத்தை அவர்களுக்குத் தாரும். என் செபத்தை கேளும். அனைத்து மனுக்குலத்தின் ஆன்மாக்கள் உமது இரக்கத்தால் இரட்சிப்பு அடைய என் மன்றாட்டை ஏற்றுக் கொள்ளும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 106 – தேவனை அங்கீகரிக்காக இளைஞர் இரக்கம் பெறும்படி செபம்**

அன்பு இயேசுவே, உம் சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாத, அறியாத மற்றும். அங்கீகரிக்காத தேவனின் பிள்ளைகளான இந்த ஆன்மாக்களை, உமது அடைக்கலத்திற்குள் கொண்டு வருவீராக. உமது மனமாற்றத்தின் ஆசீர்வாதத்தை அவர்கள் மீது மொழிந்தருளும். அவர்களுக்கு உமது நித்திய வாழ்வை தந்தருளும். உமது பிரசன்னத்தின் மீது நம்பிக்கை இல்லாத அனைவரின் மீதும் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படாத ஆன்மாக்கள் மீதும் இரக்கமாயிரும். ஆமென்.

**சிலுவைப் போர் செபம் : 107 –**

இயேசுவே நான் பெரிய பாவி என் செய்கையினால் நான் பலரை வேதனை படுத்தியிருக்கின்றேன். ஆனபடியால் தள்ளப்பட்டுள்ளேன். எனவே எங்குமே நான் ஏற்றுக் கொள்ள படாமல் நிராகரிக்கப்பட்டேன். இந்த வனாந்திரத்தினின்று என்னை மீட்டருளும். நான் மனம் மாற உதவியருளும். என் பாவ மன்னிப்பை ஏற்றருளும். உம் பெலத்தால் என்னை நிரப்பி அவலமான தாழ்நிலையினின்று நான் எழுச்சியடைய உதவி புரியும். நரக நெருப்பினின்று இரட்சிக்கப்பட்டு, உம் சித்தத்தை நான் முழு மனதோடு கடைபிடிக்க அன்பு இயேசுவே என்னையே உம்மிடம் முற்றிலுமாய் கையளிக்கின்றேன். ஆமென்.

**இதர செபம் :**

**பிதாவாகிய தேவனிடம் புதிய பரதேசத்தின் திறவுகோலை கேட்டு செபம்**

அன்புமிகு பிதாவே, தொலைந்து போன பிள்ளையான நான், குழப்பமுற்று சரிவர காணமுடியாத நிலையில் உள்ளேன். உம் உதவியும் அன்புமில்லை என்றால் நான் ஒன்றும் இல்லை. உம் திருமகனாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பால் என்னை இரட்சித்து பூமியில் பரதேசத்தின் திறவுகோலை எனக்கு தாரும். ஆமென்.